பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | டிசம்பர் 10, 1951 | இதழ் 19

திருவள்ளுவர் ஆண்டு 1982 கார்த்திகைத் திங்கள் 24-ம் நாள்

இழந்த காதல்	.... அறிஞர் அண்ணாதுரை	1
வட்டமிடும் காக்கைகள்	... கார்ட்டூன்	2
தேர்தலோ தேர்தல்	... தலையங்கம்	3
பாதுஷாவின் காதல்	.... இளமைப்பித்தன்	7
ராஜா ராணி	.... தங்கமணி	11
சிரிப்பு	... வ. சம்பந்தன்	17
இரவே நீ வா!	... புதுமைவாணன்	25
அன்னை வடிவம்	.... எஸ். ஆறுமுகம்	26
தந்தை	... வாணிதாசன்	31
நமக்குள்ளே	.... சுகி	48
ஆடும் மாடும்	.... டி. கே. சீனிவாசன்	55

இழந்த காதல்

"கலியாணத்துக்கு வேண்டியவைகளைக் கவனி! உனக்கு நல்ல சட்டைகள் தைத்துக்கொள்—பெண்ணுக்குப் பிடித்தமான சேலை வாங்கிக் கொடு" என்று தகப்பனார் கூறக் கேட்டு, திருமணம் தனக்குத்தான் என்று களித்த மகனிடம், தகப்பனார் "உனக்கல்லடா திருமணம், எனக்கு" என்று சொன்னால் எவ்வளவு மனம் கொதிக்கும்? அதுபோல, திராவிடநாடு பிரச்சினையைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள் என்று சுவை தரும் விதமாகக் கம்யூனிஸ்டு நண்பர்கள் பல இடங்களிலே பேசிவிட்டு, தீர்மான உருவிலே அதே பிரச்சினை வருகிறபோது, தத்துவ விளக்கமும் தயக்கமும் காட்டினால், உண்மையிலேயே நேசத்தை உருவாக்கவேண்டும் என்று எண்ணும் என் போன்றவர்களுக்கு எல்லாம் மனம் பதறத்தான் செய்யும். இழந்த காதலாகக் கூடாது இந்த நேச முயற்சி என்பது என் எண்ணம்.

[தேர்தல்கூட்டுறவு'பற்றிக் கம்யூனிஸ்டுகளுக்குத் தந்திருக்கும் ...யில் அறிஞர் அண்ணாதுரை இவ்வாறு குறிப்பிடுகிறார்]

N4790
N51.5.19

வட்டமிடும் காக்கைகள்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008

தேர்தலோ தேர்தல்

பொதுத் தேர்தல் ஆட்டபாட்டங்களோடு நெருங்கிக்கொண்டிருக்கிறது. தேர்தலுக்கு நிற்போர்பற்றிய முடிவான விவரம் சில தொகுதிகள் தவிர மற்ற அனைத்துக்கும் வெளியாகிவிட்டது. அதனைப் பார்க்கும்போது, ஒவ்வொரு தொகுதியிலும் ஏற்பட்டுள்ள 'போட்டி' பிரமிக்கத்தக்க விதமாகவே இருக்கிறது! ஒரு ஸ்தானத்திற்குப் பதினைந்து பேர், இருபது பேர் நிற்கின்றனரென்றால் இந்தக் கூத்தை யாரிடம் போய்ச் சொல்வது? சட்ட சபைக்கும் பார்லிமெண்டுக்கும் சென்று மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆசை இப்படி ஏராளமான 'அன்பர்'களுக்குப் பொங்கி வழிவதைப் பார்க்கும்போது நமக்கு ஒருபுறம் ஆனந்தமும் மறுபுறம் ஆச்சரியமும்தான் ஏற்படுகிறது! இத்தனை பேர் நிற்பதில் எத்தனையோ தீமை உண்டென்றாலும், ஒரே ஒரு நன்மை உண்டு என்பதைமட்டும் நாம் மறுக்க முடியாது. வாக்காளர்கள் பொறுக்கி யெடுப்பதற்கு, சல்லடை போட்டுச் சரியான ஆளைத் தேர்ந்தெடுக்க, இந்த அதிகப்படியான போட்டி சந்தர்ப்பமளிக்கிறது! இரண்டே இரண்டு பேர் மட்டும் ஒரு தொகுதிக்கு நின்றால் அவர்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ யாருக்காவது ஒருவருக்கு வாக்கை அளித்துத்தானே ஆகவேண்டும்! இப்போது நிலைமை அப்படியில்லை. எண்ணற்ற அபேட்சகர்களிடையே பத்தரைமாற்றுத் தங்கமாக ஒருவர்கூடவா அகப்படாமல் போய் விடுவார்!

தேர்தலைப் பொறுத்தவரையில் இந்த வேடிக்கைகள் ஒருபுறமிருக்கத் தமிழ்நாட்டில் இந்தத் தேர்தல் கணிசமான மாறுதலை ஏற்படுத்துமா என்பதை நாம் கவனிக்கவேண்டியது முக்கியமாகும். காங்கிரஸ் பெரும்பான்மைக் கட்சியாக வெற்றி பெற்றுவிடுமென்பதும், காங்கிரஸ் ஒன்றுதான் நாட்டை அமைதியாக ஆள முடியுமென்பதும், காங்கிரஸைத் தவிர இந்த நாட்டுக்கு வேறு 'நாதி' இல்லையென்பதும், காங்கிரஸ் தலைவர் நேரு ஊரூராகக் கூறி வருகிற செய்திகள்! இந்தச் செய்திகளையே காமராஜர்களும் ஆமோதித்து வருகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் காங்கிரஸ் மீது பொதுப்படையான அதிருப்தி எங்கும் பரவியிருக்கிறதென்ற உண்மையைக் காங்கிரஸ்காரர்களும் நன்கு உணர்ந்துதான் இருக்கின்றனர். காங்கிரஸ் ஆட்சி ஏற்படுத்திய கசப்பு, வாக்காளர்களை மாட்டுப்பெட்டிப் பக்கம் நெருங்கவிடாது என்பதையும் அவர்கள் தெரிந்துதான் வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் எதிர்ப்புக் கட்சி

களின் வலிவற்ற தன்மையைக் காட்டி வெற்றிபெற்றுவிடலா மென்று அவர்கள் நம்பியிருக்கின்றனர். இந்த நம்பிக்கை நேரு பேச்சுகளில் நன்கு புலனாகிறது.

இந்நிலையில் தமிழ்மக்கள் தேர்தலில் எவ்வாறு தங்கள் பங்கைச் செலுத்தப்போகிறார்கள்? 'எனக்கே ஓட்டு' 'என் கட்சிக்கே ஓட்டு' என்ற கூக்குரல் ஒவ்வொரு நாளும் காதைப் பிளந்து கொண்டிருக்கிறது! ஏழை பங்காளர் என்று ஒரு அபேட்சகர் தம்மை வர்ணித்துக்கொள்கிறார். தொழிலாளர் தலைவர் என்கிறார் மற்றொரு அன்பர். மக்கள் தலைவர் நானே என்கிறார் வேறொருவர். இந்த வர்ணனைகளைக் கேட்டால், இவர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற மயக்கம் ஏற்படாமல் என்ன செய்யும்! காங்கிரஸ் அலங்கோலம் புரியாத மனிதர் யாருமில்லை. ஆறு அவுன்ஸ் அரிசி சாப்பிடுகிற அனைவரும் காங்கிரஸ் ஆட்சியின் 'நாற்றத்தை' நன்கு அனுபவித்து வருகிறார்கள். எனவே அவர்கள் கண்டிப்பாகத் தங்கள் வாக்கைக் காங்கிரஸுக்கு அளிக்கப்போவதில்லை. அப்படியானால் வேறு யாருக்கு அளிக்கப்போகிறார்கள்? நிலத்தைத் தலைக்கு இத்தனை ஏக்கர் வீதம் பிரிப்பதாகவும், செல்வத்தைப் பங்கிடு செய்வதாகவும், வறுமை, பஞ்சம், வேலையின்மை இவற்றை இருந்த இடம் தெரியாமல் விரட்டி அடித்துவிடுவதாகவும் எல்லாக் கட்சிகளும் தனி நபர்களும் பிரசாரம் செய்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள்தாம் சொன்னபடி செய்யவில்லை—எனவே அவர்களை ஒதுக்கிவிட முடிகிறது—இப்போது 'புதுத் தோற்றம்' கொடுத்துள்ள இத்தனை பேர்களில் யார் தங்கள் உறுதிமொழியைக் காப்பார்கள் என்று எப்படி அறிவது? அறிந்தாலல்லவோ அவர்களுக்கு வாக்கை அளித்துச் சட்டசபைக்கு அனுப்ப முடியும்? "ரேஷனை அடியோடு ஒழிப்போம்; மூட்டைக் கணக்கில் அரிசியை அளிப்போம்" என்று இப்போது பலர் சொல்லக் கிளம்பியிருக்கிறார்கள். மற்றும் சிலர் திராவிடநாட்டைப் பெற்றுத் தருவதாகக் கூடப் பறைசாற்றுகிறார்கள். இவ்வாறு அவர்கள் கொடுக்கும் உறுதி மொழிகள், காட்டும் ஆசை வார்த்தைகள் எத்தனை எத்தனையோ! இந்த 'உறுதி மொழிப் பிரவாகம்' மனப்பூர்வமானது என்று எப்படி நாம் கண்டுபிடிக்க முடியும்? கட்சிகள் எத்தனையோ! 'சுயேச்சை' வாதிகள் எத்தனையோ! இவர்களில் பெரும்பாலோர் தேர்தல் காலப் பூசாரிகளாகவே இருப்பார்கள் என்பது நம் கருத்து! இப்போது இவர்கள் பேசும் லட்சியங்களுக்கும் வெளியிடும் அறிக்கைகளுக்கும் நாம் விசேஷ அர்த்தம் கொடுத்துவிடக்கூடாது. காதல் கொண்டவனும் மது உண்டவனும் வெளியிடும் 'அமுத மொழி'களுக்கு எந்த மதிப்புண்டோ அந்த மதிப்புத்தான் இந்த அபேட்சகர்களின் வாக்குறுதி விளம்பரங்களுக்குக் கொடுக்கவேண்டும். இந்த விளம்பரங்கள் சாதாரணப் பொதுமக்களைக் கவர்ந்து

விட முடியும். அதனால்தான் தலைவர்கள், நாட்டு நலனிலே கண்ணும் கருத்துமுடையோர் தேர்தல் சமயத்தில் விழிப்போடிருக்க வேண்டும். கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளைப் பரிசிலனை செய்து எந்தக் கட்சி தேர்ந்தெடுக்கப்படத் தகுந்தது என்பதைக் காலத்தில் அறிவிப்பதும் மக்களை இட்டுச் செல்பவர்களின் பொறுப்பாகும். இவ்வகையில் தமிழ்நாட்டில் தேர்தல் நிலை எவ்வாறிருக்கும் என்பதை நாம் நன்கு ஆராயவேண்டும்.

இங்கே முறைப்படி இயங்கி வருகிற கட்சிகள் காங்கிரஸைத் தவிரக் கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவையேயாகும். தேர்தலுக்காகப் பல கட்சிகள் இப்போது தோன்றியிருக்கின்றன. அவற்றைப்பற்றி அதிகம் கவலைப்படவேண்டியதில்லை. இந்தக் கட்சிகளில் காங்கிரஸும், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டுக் கட்சிகளும் தேர்தலில் கலந்துகொண்டு அபேட்சகர்களை நிறுத்திபிருக்கின்றன. திராவிடக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சியைத் தேர்தலில் ஆதரிப்பதென முடிவு செய்துவிட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவுதான் இன்னும் சரிவரத் தெரியாத முடிவாக இருக்கிறது. ஆனால் காங்கிரசுக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்று விளங்கும் கட்சி தி. மு. கழகம்தான் என்பதை யாரும் ஒப்புக்கொள்வர். காங்கிரஸ் பெரிய ஸ்தாபனமாக இருந்தும், தன் செல்வாக்கைத் தன் கொடுங்கோன்மை காரணமாக இழந்து நிற்பதால், தி. மு. கழகமே தமிழகத்தைப் பொறுத்த வரையில் மக்கள் மன்றமாக இருந்து வருகிறது. பெரும்பான்மை மக்களின் இதயகீதமாக இக்கழகம் விளங்கி வருகின்ற காரணத்தால் தி. மு. க. தேர்தலைப்பற்றிச் செய்யும் முடிவு, தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்ததாயிருக்கிறது. தி. மு. க. தேர்தலில் நிற்கவில்லை; காங்கிரஸும் மற்றக் கட்சிகளும் அப்படியொரு கழகம் இருப்பதாகக் கூடக் கூறுவதில்லை. இருந்தும் தி. மு. க. உருவாக்கும் முடிவு தமிழ்மக்களின் முடிவு என்பதை நாம் கூற விரும்புகிறோம்.

எனவே தமிழ்மக்கள் தி. மு. க. வின் முடிவை ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறார்கள். மதுரையில் உருவான பொதுக் குழுத் தீர்மானம் கம்யூனிஸ்டுகளை ஆதரவுக்குரியவர்களென இனங் கண்டு குறிப்பிட்டது மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருந்தது! ஆனால் அந்த மகிழ்ச்சி நிலைபேறுடையதாக விளங்காது போலும்! திராவிட நாட்டுப் பிரச்னையைத் தேர்தல் பிரச்னையாக ஆக்கிய பிறகு, அதை ஆதரிப்போருக்கே எங்கள் ஒத்துழைப்பு என்று கூறியபிறகு, 'உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திடு; பின்னர் உதவி பெறு' என்று திட்டமிட்டுக் காட்டிய பிறகு 'பின்னடைவது'

எளிதாகப்படவில்லை. ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சியும் தி. மு. கழகமும் ஒன்றுபட்டுக் களத்தில் நின்றால் ஏற்படுகிற 'வெற்றி' இருக்கிறதே அது மகத்தானதாகத்தான் இருக்கும்! அதை இழந்து விடவேண்டிய நிலையில்தான் தெரிந்தோ தெரியாமலோ நாம் கொண்டுவிடப்பட்டிருக்கிறோம். இந்த இழப்பைப்பற்றி யோசித்து என்ன பயன்? மேற்கொண்டு ஆகவேண்டிய செயல்முறை பற்றி யோசிக்கவேண்டியதுதான்! 'திராவிடநாட்டுப் பிரச்னை'யை ஆதரிக்கும் சுயேட்சை அபேட்சகர்கள்—அவர்களுக்கு நம் ஆதரவு என்று முடிவாகுமா? கம்யூனிஸ்டுகள் மனந்திரும்பினர்—அவர்களுக்கே நம் ஒத்துழைப்பு என்று முடிவாகுமா? இனிமேலும், முடிவு கூறும் தேதியை ஒத்தி வைப்போம் என்று முடிவாகுமா? இவை ஒன்றன்பின் ஒன்றாக எழும் கேள்விகள்! 'மாட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடாதே' என்னும்போது, 'அப்படியானால் எந்தப் பெட்டியில் போடுவது?' என்று கேட்கும் கோடிக்கணக்கான மக்கட்குத் திராவிட முன்னேற்றக் கழகம் பதிலளித்தாக வேண்டும். இந்த வாரத்தில் சென்னையில் கூடும் மாநில மாநாடு பதிலளிக்கும் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றுமென்று நம்புகிறோம்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்குச் சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு: *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-1

பாதுஷாவின் காதல்

இளமைப்பித்தன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அன்றிரவு...!

சபையில் மகபத்கான் பேசிய மொழிகளால், மனம் வெதும்பிப் போயிருந்தாள் நூர்ஜகான். அன்று அவளுடைய அந்தப்புரமே அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. இடது கையில் முகத்தைத் தாங்கியபடி கட்டிலின் மேல் உட்கார்ந்திருந்தாள். சிவந்த ரோஜா நிறக் கன்னங்களின்மீது கண்ணீர்க் கால்வாய் வகிடு எடுத்து ஓடிக்கொண்டிருந்தது. கொவ்வைக் கனியிதழ்கள் கூம்பிக் கிடந்தன. ஜஹாங்கீர் பின்புறமாக வந்து அவள்தோள்களின் மேல்கையை ஊன்றினான்.

நூர்ஜகான் அசையவில்லை. சிலைமாதிரி அப்படியே தன் நினைவற்றவளாய் உட்கார்ந்திருந்தாள்.

"பேகம்!" கனிவு நிரம்பிய குரலில் அவளைக் கூப்பிட்டான். பதில் இல்லை. முன்புறமாக வந்து பார்த்தான். 'பொல பொல'வென்று உதிரும் அவளுடைய கண்ணீர் முத்துக்களைக் கண்டு பிரமித்துப் போய் "ஏன் அழுகிறாய், நூர்ஜகான்? நான் ஏதாவது தப்பிதமாக நடந்துகொண்டேனா உன்னிடம்?" என்று கேட்டான். நூர்ஜகான் மௌனமாகக் கட்டிலின் மேல் மல்லாந்து படுத்துக்கொண்டு ஏதோ சிந்தனை செய்தாள். ஜஹாங்கீர் அவள் கால்மாட்டில் போய் நின்றான். நீலவர்ண 'வெல்வெட்' தலையணையின்மீது மெதுவாக அப்படியும் இப்படியுமாக அசைந்துகொண்டிருந்தன அவளுடைய நிலாநிறப் பாதங்கள்.

பூங்கூடையிலுள்ள ரோஜா மலர்களை எடுத்து அவள் கால்களின் மேல் தூவி முத்தமிட்டு "பேசமாட்டாயா?" என்று கேட்டான்.

நூர்ஜகான் கண்களைத் துடைத்துக்கொண்டு, மெல்லச் சிரித்தாள். ஜஹாங்கீருக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது. அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு "உன்னுடைய நீலமலர் விழிகள் கண்ணீரில் நீந்திப் புரளலாமா, நூர்ஜகான்?" என்று கேட்டான்.

நூர்ஜகான் அவனுடைய கழுத்தைக் கோர்த்துப் பிடித்துக்கொண்டு "சொற்களால் சுட்டுவிட்டான் மகபத்கான். அந்த வேதனை தாங்காமல் அழுதுவிட்டேன். அவ்வளவுதான்" என்றாள்.

"அவனையும், அவன் வீசிய சொல்லம்புகளையும் மறந்துவிடு. மனதை மாற்றிக்கொள்."

"மனதை மாற்றிக்கொள்ள முடியவில்லையே என்னால்."

"முடியும்."

"எப்படி?"

"இதோ இந்த மதுவின் மதுர மான சுவையினால்! வா. என் னுடைய கைகளால் நானே கொடுக்கிறேன்."

ஜஹாங்கீர், கிண்ணம் கிண்ண மாக அவளுக்கு மதுவை ஊற் றிக்கொடுத்துக்கொண்டே இருந் தான். பதிலுக்கு அவளும் அவ னுக்கு அதைப் பரிமாறினாள். இருவரும் நிலாமுற்றத்திற்குச் சென்றார்கள்.

நூர்ஜகான் கொஞ்சம் தள் ளாடினாள். அவன் அவளை அணைத்துப் பிடித்துக்கொண்டு போய் அங்கே கிடந்த கட்டிலின் மேல் உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்துகொண்டான். நிலா வெள்ளம் அவர்களை நனைத்தது.

பூலோகத்தின் அழகுகளை யெல்லாம் ஒன்றாகத் திரட்டி வடித்தெடுத்த மாதிரி மின்னி னாள் நூர்ஜகான். காற்றலைகளின் மெல்லிய அசைவினால், பிறை நெற்றியின் மேல் தொங்கிக் கொண்டிருந்த கூந்தல் சுருள்கள் அலை புரண்டன.

ஜஹாங்கீர் அவளுடைய இதழ் களில் முத்தமிட்டு "என் இன் பமே, இந்த உலகத்தில் சுகத்தை அநுபவிப்பதற்காகவே பிறந்த வர்கள் நாம். சுந்தரி! உன் அணைப்பினால் இந்த உடல் புனித மடையட்டும். மான் கன்றே, உன் மருண்ட கண்களால் என் னைப் பார். உன் முத்துப் பற்கள் மின்ன ஒரு மோகனப் புன்னகை புரி. கடல் முத்தே, ஒளிவிடு. வைரமே, சற்று நேரம் பிரகாசி. கரை காணா இன்பக் கடலில் துள்ளி வரும் வெள்ளலையே, வா... வா..." என்று தன்னை மறந்து பேசினான். அதைக் கேட்ட நூர்ஜகானின் கண்கள் சொக்கிச் சுழன்றன. அவனை மார்புறத் தழுவிக்கொண்டு "ஷா-இன்-ஷா! இந்த இரவு இப் படியே 'விடியாத' இரவாக இருந்துவிட்டால்?" என்று கேட்டாள்.

"இந்த இரவு மட்டும் என்ன நூர்ஜகான், நம் வாழ்க்கையில் குறுக்கிடும் எல்லா இரவுகளை யுமே விடியாத இரவுகளாகும் படி செய்துவிடுகிறேன். மோக லாய சரித்திரமே இந்த இன்ப இரவுகளால் மாறப்போகிறது" என்று சொல்லிவிட்டு, அவ ளுடைய மெல்லிய கன்னிதழ் களின் மீது முத்தமிட்டான் ஜஹாங்கீர்.

நூர்ஜகானுக்கு உடம்பு முழு வதும் குதுகுதுப்புப் பரவியது. மதுவின் இனிய மயக்கத்தினால் அவளுடைய உணர்ச்சிகள்யாவும் பொங்க ஆரம்பித்தன. இளமை யின் ஜீவவேகத்தால் முகம் பள பளத்தது; விழிகள் பளபளத் தன; இதழ்கள் பளபளத்தன; முத்துப் பற்கள் பளபளத்தன. கட்டிலின் மேல் விரிக்கப்பட் டிருந்த மிருதுவான பட்டு விரிப் பின் மழமழப்போடு ஒன்றிப் படுத்துக் கால்கள் இரண்டையும்

ஜஹாங்கீரின் மடியின் மேல் நீட்டிவிட்டாள். ஜஹாங்கீர் "பேகம், உன்னுடைய மனத்தில் ஒளித்து வைத்துக்கொண்டிருக்கும் ஆசைகள் எல்லாவற்றையும் வெளியில் கொட்டிவிடு. எதையும் மறைக்கவேண்டாம். இந்த நாட்டின் ஆட்சி முழுவதையும் உன்னிடமே ஒப்படைத்துவிடுகிறேன். சொல்லு—" என்றான்.

"ஷா-இன்-ஷா, நான் விரும்புவதெல்லாம் உங்களுடைய தயவு ஒன்றுதான். அந்த அன்பு மட்டும் என்னிடம் மாறாமல் இருந்தால் அதுவே போதுமானது. வாழ்விலும் தாழ்விலும் நாம் இணைபிரியாக் காதலர்களாக இருக்க வேண்டும். இந்த வாத்தை மாத்திரம் எனக்குக் கொடுங்கள்" என்றாள்.

ஜஹாங்கீர் சிரித்தான். அவனுடைய சிரிப்பில் மயக்கம் புரையடித்தோடிற்று. எழுந்து நூர்ஜகானை அப்படியே சேர்த்துத் தூக்கிக்கொண்டு "என் உடலில் உயிர் ஓடிக்கொண்டிருக்கும் வரையில், உன்னை விட்டு ஒரு கணமும் பிரிந்திருக்கமாட்டேன். இதை நீ நிச்சயமாக நம்பலாம். என் இதயத் துடிப்புகளின் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன், நூர்ஜகான்" என்று அவள் கன்னக் கதுப்புகளைச் சுவைத்தான்.

நூர்ஜகான் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஆழங் காண முடியாத ஒருவித வெறி எக்களித்து நின்றது. அவனை இரு கைகளாலும் சேர்த்துத் தழுவினாள்.

மக்கட் பேறு

தோழியர் மீனுள் பெரியண்ணன் அவர்கட்கு 2-12-51 ஞாயிறன்று ஒரு ஆண் மகவு பிறந்துள்ள நற்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல நாட்களுக்குப் பின்...!

டில்லியில் அரசாங்கப் பொக்கிஷங்களிலிருந்து வெளிவந்த நாணயங்கள் அனைத்திலும் ஒரு புது மாறுதல் ஏற்படுத்தியிருந்தான் ஜஹாங்கீர். ஒவ்வொரு நாணயத்திலும் ஒரு பக்கம் ஜஹாங்கீரின் உருவமும் மறு பக்கம் நூர்ஜகானின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தன.

இது நாட்டிலே ஒரு பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. பஞ்சாபிலிருந்த, ஜஹாங்கீரின் முதல் மனைவியின் மகனான குஸ்ரூ இதைப் பகைப்புலனாக வைத்து ஒரு கலகத்தை மூட்டினான். அவனும் அவனுடைய தோழர்களும் டில்லியை நோக்கி விரைந்து வந்தனர். ஜஹாங்கீர் அவனைத் தன்னுடைய மகனென்றுகூடப் பாராமல் கைது செய்தான். கொடுக்கமுடியாத அல்லல்களை யெல்லாம் கொடுத்துச் சிறையில் தள்ளினான்.

நூர்ஜகானின் விருப்பப்படி குஸ்ருவின் கண்ணெதிரிலேயே கலகக் கூட்டத்தார் அனைவரையும் கழுவில் ஏற்றிக் கொன்றுவிட்டான். அப்படியும் குஸ்ரூ அடங்குவதாய் இல்லை. கொலைக்களத்திலேயே தன் தந்தையை

மல்லிகை வெளியீட்டகம்
(M. P. H.)

★

புதிய வெளியீடுகள்

விஞ்ஞானத்தில் அண்ணு	0—8—0
ஏமாருதே(நிலாவழகன்)	0—6—0
இரத்தவெள்ளம்	0–10—0
ஏ, சதிகார சமுதாயமே!	0—3—0
திருக்குறள் ஏன்தேவை?	0—3—0
உலகைத் திருத்திய உத்தமர்கள்	1—0—0
ரஸ்புடீன் (ஊடுருவி)	0—8—0

வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு

★

விற்பனையாளர்கள்:

அன்னை வெளியீட்டகம்
78, விசய விக்னேசுவரர் கோவில் தெரு,
சூளை, சென்னை-7.

எதிர்க்க ஆரம்பித்தான். அவனை இருட்டறைக்குள் தள்ளும்படி கட்டளையிட்டாள் நூர்ஜகான்.

இந்தக் கொடுமையைக் கண்டு டில்லிமாநகரமே கதிகலங்கியது. மூலைக்கு மூலை குழப்பங்கள் கிளர்ந்தெழுந்தன; நாட்டுமக்கள் நாளுக்கு நாள் ஜஹாங்கீரை வெறுக்க ஆரம்பித்தார்கள்.

ஜஹாங்கீர் எதையுமே இலட்சியம்செய்யவில்லை. மது அருந்துவதும், நூர்ஜகானின் அந்தப்புரத்தில் 'தர்பார்' நடத்துவதுமாகவே இருந்தான். கொஞ்சம் கொஞ்சமாக ஆட்சி முழுவதையும் கைப்பற்றிக்கொண்டாள் நூர்ஜகான். அவளுடைய நெருங்கிய உறவினர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்து, நிலைமையைச் சமாளித்துக்கொண்டு வந்தாள்.

ஜீலம் நதிக்கரையில்...!

புல்லும் புதரும் சூழ்ந்த ஓர் அழகான இடத்தில் கூடாரம் போட்டுக்கொண்டு சில நாட்கள் வரை தங்கியிருந்தனர் நூர்ஜகானும் ஜஹாங்கீரும்.

அவனுக்கு டில்லியில் இருப்பே கொள்ளவில்லை. எங்காவது தனிமையும் அழகும் கலந்த இடத்தில் நிம்மதியாக இருக்கவேண்டுமென்று விரும்பினன். ஓய்வும் உல்லாசமும் அவனுக்குத் தேவைப்பட்டன. உடலுக்கும், உயிருக்கும் இன்பமளிக்கக் கூடவே நூர்ஜகானையும் அழைத்துச் சென்றிருந்தான்.

அந்தி மயங்கும் வேளைகளில், இயற்கையின் அழகைப் பருகியபடி மதுவின் மதுரமான மயக்கத்தில் அமிழ்ந்து கிடப்பான் ஜஹாங்கீர். பேரழகி நூர்ஜகான் 'சிதாரை' வைத்துப் பாடிப் பரவசமூட்டிக்கொண்டிருப்பாள். அவள் பாடும் ஒவ்வொரு 'கஜலு'ம் அவனுடைய மனதில் பதிந்து, இனிய கனவுகளை எழுப்பும். ஒவ்வொரு 'டோமரி'யிலும் அவன் உணர்ச்சி வசப்பட்டுத் தவிப்பான்.

ஒழிந்த நேரத்தில், இருவரும் படகேறி உல்லாசமாக ஜீலம் நதியில் மிதந்து செல்வார்கள். நூர்ஜகானை வருணித்துக் கவிதை புனைந்து பாடி மகிழ்வான் ஜஹாங்கீர்.

இந்தக் கோலாகல வாழ்வுக்கு ஒரு குத்தீட்டியாக வந்து குறுக்கே பாய்ந்தான் மகபத்கான்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

9. சோக மயம்!

அதே சமயத்தில்......

“ளொல்! ளொல்!...” என்று பயங்கரமான ஒரு உறுமல்! ராஜாவின் மீது பாய்ந்த பண்ணைக்காரர் சட்டென்று திரும்பிப் பார்த்தார். எங்கிருந்தோ வந்த ஒரு பயங்கரமான வேட்டை நாய் பண்ணைக்காரரைப் பார்த்து வெறிபிடித்துக் குரைத்துக் குதித்தது! பண்ணைக்காரர் யானைக்குட்டியைப் போலிருப்பது அந்த நாய்க்கு எப்படியிருந்ததோ?

பண்ணைக்காரருக்கு நாய் என்றாலே கொஞ்சம் பயம். அதுவும் பயங்கரமான வேட்டை நாய் என்றால்...? சொல்ல வேண்டுமா? அவர் ‘ஆ...ஊ...!’ என்று அலறியடித்துக்கொண்டு அங்கிருந்து குதித்துக் குதித்து ஓட ஆரம்பித்தார்!

ஓடுவதைக் கண்டால் நாய்க்கு இளப்பமாயிற்றே! வேட்டை நாய் பண்ணைக்காரரைத் துரத்த ஆரம்பித்தது! பண்ணைக்காரர் ‘குய்யோ முறையோ!’ என்று அலறினார்! சுகந்தி “அப்பா! அப்பா!” என்று கதறினாள்!

இதைக் கண்டு ராஜாவுக்குச் சிரிப்பு வந்தது என்றாலும் அவன் சிரிக்கவில்லை! அவனுக்குப் பரிதாபமே ஏற்பட்டது. அவன் அருகில் கிடந்த கழியை எடுத்துக் கொண்டு ஓடினான். பண்ணைக்காரரைத் துரத்திச் சென்ற நாயைப் பாய்ந்து தாக்கினான்! வேட்டை நாயும் அவனைத் தாக்கத் திரும்பியது! ஆனால் பலமாக விழுந்த அடியினால்

காலொடிந்த வேட்டை நாய் 'வாள் வாள்' என்று கத்திக் கொண்டே ஓடிப் போயிற்று, குறிஞ்சிக் காட்டிற்குள்ளே!

பண்ணையார், வேட்டை நாயிடமிருந்து தன்னைக் காப்பாற்றிய ராஜாவைப் பார்த்தார். "பயலே! நீ தப்பித்துக் கொண்டாய்!" என்று இளைக்க இளைக்கச் சொன்னார்.

"தப்பித்துக் கொண்டது நான் அல்ல; நீங்கள்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து 'விருவிரு'வென்று நடந்தான் ராஜா. பண்ணைக்காரருக்குக் கோபம் வரத்தான் செய்தது; ஆனாலும் அவர் சுகந்தியை அழைத்துக் கொண்டு பேசாமல் வீட்டிற்குக் கிளம்பினார். போகும் வழியில் "சுகந்தி, இந்தப் பயல் போலத்தான் இருப்பான் உன் மாமன் மகன் கூட" என்று சொல்லிக் கொண்டே போனார்.

ராஜா ஆலமரத்தடிக்குப் போனான். பாறையின் மீது உட்கார்ந்தான். நடந்ததை எல்லாம் வெகு தூரத்தில் பாறை மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மாயவன் பயம் தெளிந்து வெளியே வந்தான்; ராஜாவிடம் வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"டேய் ராஜா அண்ணாச்சி, நல்ல காலம்!"

"ஆமாம், உங்கள் பண்ணைக்காரருக்கு!" என்றான் ராஜா. மாயவன் வாயைப் பொத்திக் கொண்டு குபீரென்று சிரித்தான். சிரித்து ஒரு நிமிஷம் ஆகவில்லை. அதற்குள், மறுபடியும் நாயின் குரைப்புச் சத்தம் கேட்டது!

இருவரும் 'டக்'கென்று நிமிர்ந்து பார்த்தார்கள்.

எதிரிலிருந்த ஓர் இடுக்கு வழியிலிருந்து காலொடிந்து ஓடிய வேட்டை நாயைத் தூக்கிக் கொண்டு ஓடோடியும் வந்தான் ஒரு வேட்டைக்காரத் துரை!

அந்தத் துரையைக் கண்டதும் மாயவன் விழித்தான்! ராஜா திகைத்தான்!

துரை வந்தான்.

"ஏய்! நாயை அடித்தவன் யார்?"— மாயவனைக் கேட்டான் மாயவன் பயந்தான். "நான் இல்லை. இவன்தான்!" என்று உளறினான்! "ஆமாம் நான்தான்!" என்றான் ராஜா வீரமாக! அந்தத் துரை ராஜாவை ஏனோ விழித்து விழித்துப் பார்த்தான். பிறகு, "என்னடா, துணிச்சலாய்ப் பேசுகிறாய்?" என்றான்.

"பின்னே, கோழைபோலப் பேச வேண்டுமென்கிறாயா? நான் தான் அடித்தேன்!"

"ஏன் அடித்தாய்?"

"கடிக்க வந்தது; அடித்தேன்!"

“ கடிக்க வந்தது அடித்தேன்! உன்னை என்ன பண்ணுகிறேன் பார்!” என்று கத்திக்கொண்டே ராஜாவின் மீது ‘சரே’லென்று பாய்ந்தான் வெள்ளைக்காரன். ராஜாவை இறுக்கிப் பிடித்துக் குண்டுக் கட்டாய்த் தூக்கினான். தோள் மீது போட்டுக் கொண்டு, புதர்களைத் தாண்டி ஓட ஆரம்பித்தான்! அவன் தூக்கிவந்த வேட்டை நாயும் நொண்டி நொண்டி ஓடியது!

“ ஆ! அப்பா! அப்பா!” என்று கத்திக்கொண்டே மாயவன் தன் குடிசையை நோக்கி ஓடினான். ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்த தன் அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னான். அப்பா துடித்தார். மாயவனை அழைத்துக் கொண்டு பண்ணைக்காரரிடம் ஓடினார். நடந்ததைச் சொல்லி முறையிட்டார்.

“ அந்தக் கர்வம் பிடித்த பயலுக்கு வேண்டும் - வேண்டும்! இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்! நீ போய் உன் வேலையைப் பார்!” என்றார் பண்ணைக்காரர்.

மாயவனும், அவன் அப்பாவும் மனவேதனையுடன் திரும்பினார்கள்!

அன்றிரவு ஒரே சோக மயம்!

மாயவனுக்கு, அவன் அப்பாவுக்கு, அவன் தங்கை ரஞ்சிதத்திற்குச் சாப்பிட, உறங்க—எதற்குமே மனம் வரவில்லை! யாருக்குத்தான் மனம் வரும்? கொஞ்ச நேரம் ஆயிற்று.

அப்பா, குடிசைச் சுவரில் சாய்ந்தபடியே தன்னை மறந்து உறங்கிப் போனார். ரஞ்சிதம் அவர் மடியில் படுத்து அழுது கொண்டே தூங்கிப் போய் விட்டாள். மாயவன்—அவனுக்குத் தூக்கம் தூக்கமாய் வந்தது. கடைசியில் அந்தத் தூக்கத்தை மறைக்க ஒரு வழியைக் கண்டுபிடித்தான். அது என்ன வழி?

மாயவன் அகல் விளக்கைப் பெரிது பண்ணினான். அருகில் உட்கார்ந்தான். கதைப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினான்.

10. வீர வணக்கம்!

அரிவாளைத் தூக்கிப் பிடித்து வீர கர்ஜனை புரிந்தாள் புரட்சித் தங்கை ராணி! ராஜசிம்மன் திடுக்கிட்டுத் திகைத்தான்!

"ஆ!......நீயா?"

"ஆம், நான்தான்! உன் மரகத முடியை நொறுக்க வந்த நான் தான்!"

"வெறி பிடித்த நாயே, செத்துப்போ!" என்று சீறிக் குமுறி வாளை வீசினான் ராஜசிம்மன்!

"ஆ!" என்று கத்தினாள் ராணி! இடது கை மண்ணிலே வீழ்ந்து துடித்தது! அதே சமயத்தில் "ஆ, ஐயோ!" என்று ஓர் அலறல் கேட்டது!

ராஜசிம்மன் திரும்பிப் பார்த்தான். சுதந்திர தாகங்கொண்ட மக்களின் வெறித் தாக்குதலுக்குப் பலியான நாகநாதன் குதிரையின் மீதிருந்து கீழே விழுந்து உயிர் துறந்தான்!

"நெஞ்சமற்ற வஞ்சகா! ஒழிந்து போ!"—இந்த வீரப் பேச்சைக் கேட்டுத் திரும்பிய ராஜசிம்மன் சிரசு, வீசியெறியப் பட்ட ராணியின் அரிவாளால் இரண்டாக அரியப்பட்டது!

ராஜசிம்மன் ஒழிந்தான்! ராணி இறந்தாள்! முடியரசு அழிந்தது! குடியரசு மலர்ந்தது! சுதந்திரத்தைப் பெற்ற பவளபுரி நாட்டு மக்கள், சுதந்திரத்திற்காக, உயிரை—ரத்தத்தைச் சிந்திய மக்களுக்கு வீர வணக்கம் புரிந்தார்கள்; சுதந்திர கீதம் வானைப் பிளந்தது! எங்கும் குதூகலம் கும்மாளமிட்டது! சுபம்!...

கதை உதிர்ந்தது :

மாயவன் கதையைப் படித்து முடிப்பதற்கும், வாசலிலிருந்து "மாயவா!" என்ற குரல் கேட்பதற்கும் சரியாக இருந்தது. மாயவன் புத்தகத்தைப் போட்டு விட்டு வெளியே எட்டிப் பார்த்தவன் பிரமித்துப் போனான்! ஏன்?

மாயவன் தூங்கிக் கொண்டிருந்த அப்பாவையும் ரஞ்சிதத்தையும் பரபரப்புடன் எழுப்பினான்.

"அப்பா! அப்பா! ராஜா வந்து விட்டான்! ராஜா வந்து விட்டான்!"

எல்லோரும் வெளியே வந்து பார்த்தார்கள். பண்ணைக்காரர், அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரான வேட்டைக்காரர், அந்த வேட்டைக்காரரின் மகனான துணிச்சல் பேர்வழி ராஜா, சுகந்தி, ராஜாவை அடையாளம் கண்டுபிடித்துத் தூக்கிச் சென்று தந்தையோடு மகனைச் சேர்த்த வெள்ளைக்காரத் துரை எல்லோரும் முக மலர்ச்சியுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

"டேய், இவந்தாண்டா அண்ணாச்சி, என் கொலைகார அப்பா! இன்று முதல் அந்தக் கொலைகாரத் தொழிலான வேட்டைத் தொழிலை விட்டுவிடுவதாகச் சத்தியம் பண்ணிக் கொடுத்து விட்டார்!" என்று குதூகலத்துடன் சொல்லிக் கொண்டே தன் அப்பாவைப் பார்த்தான் ராஜா.

"சரி. எல்லோரும் வாருங்கள், நம் வீட்டு விருந்திற்கு" என்றார் பண்ணைக்காரர்.

"நாங்கள் கூடவா!" என்று வாயைப் பிளந்தார் மாயவனின் அப்பா.

"நீங்கள் மட்டும் மனிதரில்லையா என்ன? ஒன்றே குலம் ஒருவனே தேவன்! இனிமேல் என் பெரியப்பாவும் சுகந்தியும் என்னென்ன செய்யப் போகிறார்கள் பாருங்களேன்! இந்தக் கிராமத்தில் காந்தி சிரிக்கப் போகிறார் பாருங்கள். என்ன பெரியப்பா, அப்படித்தானே?" என்றான் ராஜா, பண்ணைக்காரரைப் பார்த்து.

"நீ வந்து என்னையே மாற்றிவிட்டாய். நான் ஊரையே மாற்றுகிறேன் பார். மாயவா, ரஞ்சி, வாருங்கள்!" என்றார் பண்ணைக்காரர்.

மாயவன், ரஞ்சிதம், அவர்கள் அப்பா மூவரின் கண்களுக்கும், காந்தி சிரிப்பதைப் போல் ஒரு பிரமை தோன்றி மறைந்தது!

(முற்றும்)

129 Persons are awarded prizes in our competition No. 63. 1st prize 83 persons, 29 persons 3rd pirze, one person 4th prize and 16 persons the 5th prize.

Full particulars are published in the Rainbow dated 10—12—51

ரிஜிஸ்டர் நெ. 249 | ரூ. **25,000** பரிசு | போட்டி நெ. 65

M S Premier Bank of India Ltd-ல் *சீல்* செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S. NO. 63 *102 TO 117=433

112	106	109	111
103	117	114	104
115	105	102	116
108	110	113	107

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 63 on 31/1/51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramaswamy 28/11/51
Agent, Madras.

முடிவு தேதி ***27–12–51*** விடை ***12–1–52***

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் *1*-க்கு ரூ5-0-0

446

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 104 முதல் *119* வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினுலும் 446 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானுலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. 65

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

இரவே நீவா!

புதுமைவாணன்

இருள்படைத்த காரிரவே வாராய்! நின்னை,
எழில்படைத்த காட்சிதனை விரும்புவோர் தாம்
அருள்படைத்த நெஞ்சிலராய் வெறுப்பார், ஆனால்
அறியாமல் வெறுப்பவரே அவர்களெல்லாம்.
பொருள்படைத்த மனிதரிடம் உழைப்பை விற்றுப்
பொழுதெல்லாம் பாடுபடும் எழை மக்கட்(கு)
அருள்படைத்தே இளைப்பாற ஓய்வதென்னும்
அமுதத்தை வார்க்கின்ற இரவே நீவா!

பிரிவாற்றாத் தலைவிக்குக் கூற்றே! காதல்
போராற்றில் வீழவெனத் துடிதுடிக்கும்
கருவேற்கண் ஒருத்திக்குத் துணையே! சோற்றுக்
கலிதீர்க்கத் தம்மானம் பேரம் பேசி
உருவத்தை மிகமினுக்கிக் காமந்தூண்டும்
ஒளிவிழியை வலைவீசும் கணிகையர்க்கே
வருமானம் தருகின்றாய்! எனவே நின்னை
வாழ்த்திவர வேற்கவுளார், இரவே நீவா!

உழைப்பதற்குச் சக்தியுள தானாலந்தோ
ஒரு தொழிலும் இல்லாமல் பசியால் வாடிப்
பிழைப்பதற்கும் வழியின்றிச் சாவைத்தேடிப்
பிள்ளைகளும் மனைவியுங்கை பிசையப்பார்த்து
மழைப்பசையே இல்லாது பயிர்போல் வாடும்
மனிதனெனும் நல்ல மகன் உயிரின் ஆசை
அழைப்பாலே திருடுதற்கே உதவுகின்றாய்
அத்திருடன் உயிர்காக்கும் இரவே நீவா!

அன்னை வடிவம்

எஸ். ஆறுமுகம்

டிங்-டங்-டிங்-டங்-டிங்!

சுவர்க்கடிகாரம் ஐந்து முறை அடித்து ஓய்ந்தது. காலத்தின் அளவைக் கணக்கிட்டுக் காட்டுவதில்தான் இக்கடிகாரங்களுக்கு எத்துணை கடமையுணர்ச்சி இருக்கின்றது. ஆச்சு; இன்னும் குறைந்த பட்சம் கால மணி நேரமாகிலும் ஆகும் 'அவர்' ஆபீஸ் முடிந்து வருவதற்கு. காப்பியைப் போட்டுத் தயாராகப் பிளாஸ்கில் வைத்துவிட்டு அவர் வரவிற்குக் காத்திருந்தேன், மழைத் துளிகளுக்கென ஏங்கிக் கிடக்கும் சாதகப் பட்சியைப் போன்று. சற்றைக்கொருதரம் வாசலுக்கும் உள்ளுக்குமாக நான் நடந்துகொண்டிருந்தேன். கால்கள் இயந்திரம்போல இயங்கினவே தவிர, மனம் மாத்திரம் கருத்திற்கும் சிந்தனைக்கும் பிடிபடாத பாவனையில் சுழன்றோடி, அலைபாய்ந்து ஆர்ப்பரிக்கும் நினைவுகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து ஆலவட்டம் சுற்றியது.

இருந்திருந்தாற்போலக் குழந்தை வீரிட்டு அழுதது. சப்தம் கேட்டதுதான் தாமதம்; ஓடிப் போய்த் தூளியில் படுத்திருந்த என் கண்மணி ராதையை எடுத்துச் சமாதானம் செய்வதற்குள், அம்மம்ம — போதும் போதுமென்றாகி விட்டது. ஆனாலும் அதில் எனக்கு ஒரு வித மகிழ்ச்சி தாய் உள்ளத்திடைப் பெருக்கெடுத்துச் சுரக்கும் அன்பின் ஆனந்தம். ஒருகால் என் ஆனந்தத்திற்காகவே தான் இப்படிக் குழந்தை அடம் பிடித்து அலறித் தீர்க்கிறதோ என்று கூட எண்ணமிடுவேன். நீங்கள் சிரிப்பீர்கள்!

குழந்தை என் அரவணைப்பில் 'கப்சிப்' என்றாகிவிட்டது. எனக்கு வேலை மிச்சம்.

அடுத்த தெருப் பெண்கள் வந்து என் மகளைப் பார்த்துச் சென்றார்கள், எனக்குப் பெண் பிறந்திருக்கும் சேதியறிந்து.

மனத்திற்கு மட்டும் ஓய்வு என்பதே கிடையாதோ? கடந்த நினைவுகள்—நிகழ்காலச் சிந்தனைகள்—எதிர்காலத்துக் கனவுகள்—இப்படி நான் நினைவிழந்து போயிருந்தவள், காலடியோசை கேட்டதும் உணர்வுடன் விழிப்புப் பெற்றேன். 'அவர்' வந்துவிட்டார். ராதையை ஒரு கையால் தாங்கி, இன்னொரு கையில் காப்பியை ஏந்தியவண்ணம் அவர்முன் நின்றேன். இக்கட்டான என் நிலையை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சொன்னார் என் துணைவர்:

"சுலோ, இப்படி நீ ஒண்டிக் கையாக எவ்வளவு நாள் தான் சிரமப்பட முடியும்? சொற்ப சம்பளத்தில் அஞ்சலை மாதிரி

ஒருத்தி நமக்கு வேலைக்குக் கிடைத்துவிட்டால் எவ்வளவோ உபகாரமாயிருக்கும், இல்லையா?''

உண்மை. அவ்வளவு லகுவில் எவள் வேலைக்கு அகப்படப் போகிறுள், அதுவும் அஞ்சலையைப் போன்று? முதலில் 'நாணயம்' வேண்டுமே. அஞ்சலை! ஆம்; அவள் தப்பிப் பிறந்தவள்!

அஞ்சலை இப்பாரந்த உலகத்தில் ஐம்பது ஆண்டு அனுபவம் பெற்றவள். வாழ்வின் கடைசிக் கட்டத்தில் அவள் ஒருத்தியே பாக்கி. அவள் கணவன், மகன் எல்லோரும் அவளிடம் 'விடை' பெற்றுச் சென்றுவிட்டார்கள். வேறு ஒரு 'தொடு'சும் அவளுக்குக் கிடையாது. அவள் வாழ்வின் தொடுகோட்டின் முனையில் நின்று கொண்டிருந்தாள்.

எங்கள் நல்ல காலம் தான் அவளாகவே எங்கள் வீடு தேடி வேலைக்கு வந்தாள். அப்பொழுது என் முதல் குழந்தை குமார் பிறந்து சில தினங்களே ஆகியிருந்தன. குமாரை எடுத்து வைத்துச் சீராட்டும் 'ஆயா' ளாக அவள் அமைந்தாள். எஞ்சிய நேரங்களில் கூடமாட வீட்டு வேலைகளைச் செய்வாள். நாளாவட்டத்தில் அவளும் எங்கள் குடும்ப நபராகவே ஆகிவிட்டாள். அஞ்சலை என்றால் போதும், குமார் அப்படியே அவளிடம் ஒட்டிப்போய்விடுவான். வேடிக்கை காட்டுவாள்; விளையாட்டுச் செய்வாள், சீராட்டுவாள்; தாலாட்டுவாள். பதிலுக்குக் கன்னங்குழியச் சிரித்து, அச்சிரிப்பிலே எத்தனையோ இன்பக் கதைகளை இழையோடச் செய்து நாங்கள் பூரித்துப் புளகாங்கிதம் கொள்ளச் செய்வான் அவன். தினமும் வீடு கல்யாண வீடாக அமளி துமளிப்படும். அஞ்சலைக்குக் குமார் பக்கத்தில் இருந்து விட்டால் போதும்; சமயங்களில் சாப்பிடக்கூட மறந்து விடுவாள். அவ்வளவு பிராணன், பாசம் அவன் பேரில். அவள் தப்பிப்பிறந்தவள்!

ஆனல்...

யார் செய்த குற்றமோ, ஓராண்டு முடிவதற்குள் எங்களை ஏமாற்றிவிட்டுக் குமார் கண்ணை மூடிக்கொண்டு போய்விட்டான். தன் ஆசை முகத்தை எங்கள் இருவர் இதயங்களிலும் என்றும் பசுமையுடன் பதியச்செய்து விட்டு அவன் விதிவழி ஏகிவிட்டான். இதோ, அவன் கொள்ளைச் சிரிப்பு என்னுள் கணீரென்று எதிரொலி செய்கிறதே! அவன் பால்முகம் என் உள்ளத் திரையில் அழகுகாட்டி நிழலாடுகிறதே! மறக்கக்கூடிய முகமா அது? மறக்கக்கூடிய சிரிப்பா அது? அவன் உருவம் என் உயிர்; அவன் சிரிப்பு என் துடிப்பு! ஆனல் அவன் போய்விட்டானே சொல்லாமல் கொள்ளாமல், மின்னுமல் முழங்காமல் தோன்றி மறையும் மின்னல் மாதிரி!

அட்டைப்படக் கதை

அக்கணமே என் உயிர் போய்விட்டது. என் பதி பிரமை

கொண்டு காணப்பட்டார். வீடு களை இழந்தது. புதைகுழி அமைதி எங்கும் ஆரோகணித்து விட்டிருந்தது. நாங்கள் புதைந்து போனோம். அடுத்த இரண்டாம் நாள் அஞ்சலை வீட்டை விட்டு எங்கோ போய்விட்டாள். அவளுக்குச் சேரவேண்டிய சம்பளப் பாக்கியைக் கூடப் பெற்றுக்கொள்ளாமல் போனது எனக்கு—எங்களுக்கு ஆச்சரியம் விளைத்தது. அத்துடன் புரியாததொரு புதிராகவும் பட்டது. மற்றபடி வேற்றிடங்களில் நிகழ்வது போன்று வீட்டில், வீட்டின் பொருள்களில் எந்தக் குறையோ, குந்தகமோ, ஐயமோ உண்டாகவில்லை. அவள் தப்பிப்பிறந்தவள்!

பின், இடைவெளியிருந்த இந்த ஓராண்டு — முன்னூற்று அறுபத்தைந்து நாட்கள்—எத்துணை கோரமான, பயங்கர அமைதியை வீட்டில் நிலைக்கச் செய்து விட்டது. கும்பிருட்டில், குமையும் மனதுடன் குமுறும் அலைகடல் முன் நிற்கையில் பிறக்கும் அமைதி காட்டும் அச்சம் என்னுள் தினமும் ஆட்சி செலுத்தியது. நான் அஞ்சினேன்; அலறினேன். இப்போது நினைத்தால்கூட குலை நடுங்குகிறதே! தனித்தனியே குழந்தை குமாரின் பிரிவில் மனம் வெந்துருகிய எங்களுக்கு அஞ்சலை இருந்திருந்தாலும் சற்று ஆறுதல் கூறுவாள். ஆற்றாமை தெளியும்; ஆறுதலுறுவோம். எப்படியோ நாட்கள் கழன்று விழுந்தன, காலத்தின் கைப்பிடியை விட்டு.

சூனியமான எங்கள் வாழ்வை வளம்படுத்த ஆசைக் கதிரவனாக என் இரண்டாப் செல்வம் ராதை அவதரித்து மாதம் ஒன்று நிறைவெய்தப் போகிறது. மகவின் மோகனப் புன்னகையில், மீண்டும் பழைய அமைதி கொஞ்சம் கொஞ்சமாகப் படர ஆரம்பித்தது, விண்ணில் தினம் தினம் வளரும் மதியொளி போல.

"சுலோ"

நாலைந்து முறை 'அவர்' என்னைக் கூப்பிட்டிருக்க வேண்டும். நான் கவனிக்கவில்லை. நினைவு தப்பி இருந்தேன். ராதையின் முகவிலாசத்தில் என் குமாரைக் கண்டேன்; மயக்கமுற்றுவிட்டேன் போலும்!

சுவரில் மாட்டியிருந்த அவன் போட்டோவைப் பார்த்தேன். எனக்கு அழுகை

மேலிட்டது. அந்தப்படம் எடுப்பதற்கும் ஆதாரமாக விருந்தது அதே அஞ்சலையே அல்லவா? நன்ருக நினைவு வருகிறது. அடுத்த வீட்டில் தங்கள் குழந்தையைப் போட்டோ பிடித்ததைக் கதை கதையாகச் சொல்லிப் படத்தையும் காட்டிளைாம் மீனுட்சி அத்தை. குமாரையும் அது போன்று படம் எடுக்க வேண்டுமென்ற தன் ஆவலை வெளியிட்டாள் அஞ்சலை. அடுத்த நாள் குமாரின் உருவம் படமாக வீட்டை அலங்கரித்தது. அஞ்சலைக்கு ஆனந்தம் நிலைகொள்ளவில்லை.

அவர் கூப்பிட்டாரே? ஓடினேன். யாரோ நண்பரைச் சந்திக்க வேண்டுமென்று நேரத்திலேயே உணவருந்திச் சென்ருர். வெளியே இருள் படர்ந்திருந்தது. என் பிள்ளைக் கனியமுது ராதையைத் தூங்கப் பண்ணிய பிறகு கூடத்தில் வந்தமர்ந்தேன். தூக்கம் கண்களைச் சுற்றி விட்டது.

'திடுமென்று' யாரோ உள்ளே நுழையும் அரவம் கேட்டதும் விழித்துக் கொண்டேன். என் உயிர்த் துணைவராக இருக்குமென்று எண்ணமிட்டேன். எண்ணம் என்றுமே சரியான முடிவு காட்டிவிடுவதில்லையே. என் கணவர் இல்லை. பின் யார்?

கூர்ந்து நோக்கினேன். யாரோ ஒருபெண்ணின்உருவம் நிழலாடியது. பயம் உள்ளூற 'விளார்' வாங்கிற்று. விளக்கைப் பெரிது பண்ணி உள்ளே அடிமேல் அடி எடுத்து வைத்தேன். அங்கே கண்ட காட்சி என்னைத் திகைக்க வைத்தது. நடுங்கும் கரங்களால் எங்கள் குமாரின் புகைப்படத்தைப் பற்றியவாறு, கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் அஞ்சலை. ஆமாம்; அஞ்சலை!

"அம்மா, என்னை மன்னியுங்க, உங்க உத்தரவு இல்லாம வீட்டுக்குள்ளே நுழைஞ்சதுக்கு. உங்களுக்குப் பொண்ணு பிறந்திருக்கிற நல்ல சேதி இப்பத்தான் காதிலே விழுந்துச்சு. இந்தச் சந்தோசமான தாக்கல் என்னிக்குக் கிடைக்குமின்னு தானே இவ்வளவு நாளாத் தவசு பண்ணிக் கிடந்தேன். நம்ப

குமாரு தான் நமக்குக் கொடுத்து வைக்கல்லே. இந்தக் குழந்தைக்கேனும் வயசு எழுதிப் போடணும்......"

தனித்த உரிமையுடன், உணர்ச்சி வசப்பட்டவளாகப் பேசினுள் அஞ்சலே. மேலே தொடர முடியவில்லை அவளால். முட்டி மோதிவரும் புதுப்புனல் போல அவள் கண்கள் கக்கி விட்ட கண்ணீர் வெள்ளம், சுருங்கிக்கிடந்த அவள் கன்னங்களின் வழியே வழிந்து கொண்டிருந்தது. பேசி முடிந்ததும் இமை வெட்டும்போது, இமை மூடித் திறந்தாள். இமைக் கோளத்தில் என் அன்பின் உருவம் குமாரைத் தரிசித்தாளோ, அஞ்சலே? என் நேத்திரங்கள் நீர் கொட்டின. இவ்வளவு பாசமும் அன்பும் கொண்ட இவள், ஏன் முன்பு என்னிடம்கூட ஒன்றும் கூருமல் வீட்டைவிட்டு வெளியேறினுள்?

புதிர் விளங்க அவளிடம் வினு விடுத்தேன்.

"அம்மா, நீங்க ஆச்சரியப் படுவீங்க. அந்தக் குழந்தை குமார் இறந்ததைக் கண்டு பெற்றெடுத்த நீங்க எம்பிட்டோ வேதனைப் பட்டிருப்பிங்க. ஆனு அதோடேயே நாள் பூராவும் ஒட்டியிருந்த எனக்குக் குமார் செத்ததும் உயிரே போயிருச்சு. உங்க வீட்டிலே எங்கே பார்த்தாலும் அது முகம் தான் எனக்குத் தோணுச்சு; எங்கே திரும்பினுலும் அது சிரிப்புத்தான் என் காதிலே ஒலிச்சுது. அதன் பிரிவு என்னைப் பாடாய்ப் படுத்தி விட்டது. அப்புறம் கொஞ்சமும் இங்கே இருக்க மனசு வரல்லே. உங்ககிட்டே சொல்லிட்டுப்போனுல் சம்மதிக்க மாட்டிங்களேன்னுதான் அப்படி ஓடிப்போனேனுங்க. உங்க கவலையைப் போக்கடிக்க இன்னெரு குஞ்சு பிறந்ததும், திரும்ப உங்களோடேயே இருந்துடவேணுமின்னு வேண்டிக் கிட்டிருந்தேனுங்க. என் ஆசை நிறைவேறி யிருச்சுது......"

அவள் கண்களில் கண்ணீர் விளிம்புகட்டி நின்றது.

என் தாயுள்ளம் என் கண்மணி குமாரின் பிரிவில் பரிவு கொண்டதுபோல, ஏக்க முற்றது போல, அஞ்சலேயும் ஏங்கி யிருக்கிருள்; வெந்துருகி யிருக்கிருள். அவள் சாதாரண வேலைக்காரியல்லவே. தாய் உள்ளம் கொண்டவள் அவள்! ஆம்; அவள்—அஞ்சலே தப்பிப் பிறந்தவள்!

"அஞ்சலே, நீ சாதாரணப் பிறவியல்ல" என்றேன் நான் நா தழுதழுக்க. நீர் வழிந்த கண்களை இறுக மூடிக்கொண்டேன். மனத்திரையில் அஞ்சலே தோன்றினுள். அதுசமயம் என் அன்னை இதயத்திலே அவளும் ஓர் அன்னைவடிவமாகவே காட்சியளித்தாள். நான் மெய்சிலிர்த்தேன். சுய உணர்வு வந்ததும் கண் திறந்தேன். தூளியில் கண் வளர்ந்த என் கண்மணி ராதை, அஞ்சலேயின் இன்ப அரவணைப்பிலே முறுவல் பூத்துக் கொண்டிருந்தாள்!

தந்தை

வாணிதாசன்

அவன் கல்வி இலாகா மந்திரி அலுவலகத்தில் வேலைசெய்து கொண்டிருந்தான். அவனுக்குக் கிடைத்த ஊதியம் அவனை நகரத்தில் குடி இருக்க அனுமதிக்கவில்லை. அவன் அருகிலிருந்த சிற்றூரில் குடியிருந்து வந்தான். ஒவ்வொருநாளும் காலையில் அச்சிற்றூரிலிருந்தே நகர பஸ்ஸில் அலுவலகத்திற்கு வருவான்.

அவளும் அவனோடே ஒவ்வொருநாளும பஸ்ஸில் வந்து கொண்டிருந்தாள்.

அவள் எதிரில் அமர்ந்து நடு நகரம் வரையில் பஸ்ஸில் வருவது அவனுக்கு இன்பமாகத்தான் இருந்தது.

அவள் நல்ல அழகி. கடற்கரை மணற்பரப்பைப் போன்று படிப்படியாக வாரிவிடப்பட்ட கூந்தல் அவள் அழகிற்கு அழகு செய்தது. நகரத்தில் பழகுகின்ற மற்ற பெண்களைப் போலச் செயற்கைச் சிங்காரங்கள் அவளிடம் இல்லாதிருந்தது புதுமையாகத்தான் இருந்தது. அப்படி இருந்தும் அவள் மற்றவர் கண்களுக்கு விருந்தாகவே இருந்தாள்.

நகரத்திலுள்ள ஒரு கடையில் அவளுக்கு வேலை.

சர்க்கார் அலுவலகங்களைப் போலவே நகரங்களில் கடைகள் குறிப்பிட்ட நேரங்களில் திறக்கப்பட்டு மூடப்படும்.

அவள் காலையில் கடை திறப்பதற்குச் சிறிதுநேரத்திற்குமுன் போவதற்காக அந்தத் தெருக்கோடியில் ஒவ்வொரு நாளும் காத்துக் கொண்டிருப்பது வழக்கம். பஸ் வந்தவுடனே மற்றவர்களைக் கவனியாது ஏறி உட்கார்ந்துகொள்வாள். இது என்றோ ஒருநாள் நடப்பது. பெரும்பாலும் அவள் தெருக்கோடிக்கு வருமுன்பே பஸ் தொலைவில் வருவதைப் பார்த்து விடுவாள். ஓட்டமும் நடையுமாக ஓடி வந்து இளைக்க இளைக்க வண்டியில் ஏறுவாள். சில சமயங்களில் வண்டி புறப்பட்டுவிடும். கைப்பிடியைத் தாவிப் பிடித்துப் படியில் ஏறிக்கொள்வாள்.

அவளை அவன் முதன்முதலில் பார்த்தபோதே அவனுக்கு அவள் மிக மிகப் பிடித்திருந்தாள். அவனையும் அறியாது அவன் மனம் அவளை வட்டமிடத் தொடங்கியது.

சில பெண்களைச் சந்திக்கும் போதே அவர்களை அடைய வேண்டும் என்று மனம் நினைக்கும். அந்த இனத்தைச் சேர்ந்த பெண் அவள். கட்டையான உடல், கடைந்தெடுத்த கை கால்கள். சுருண்டு நீண்டு தொங்கும் கரிய கூந்தல். வளைந்த புருவக் கரைகளுக்கிடையே கட்டின்றிப் பாயும் சேல் விழிகள். இளஞ்சிரிப்பை அடிக்கடி எழுதிக் காட்டும் இனிய மெல்லிய செவ்விதழ்கள்.

அவன் உள்ளத்தில் பல நாளாக எழுதப்பட்ட கற்பனைக் கோட்டைக்கேற்ற அரசியாக அவள் தோன்றினாள். அவன் மனதிலே மறைந்துகிடந்த ஆசைக்கேற்ற அழகுருவாக அவனுக்கு அவள் தோன்றினாள்.

அவனையும் அறியாமல் அவன் கண்கள் அவளையே அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தன. அது அவளுக்கு அருவருப்பாக இருக்கிறது என்பதை அவன் அறியாமலில்லை. அறிந்துதான் அவன் தன் கண்களை வேறெங்கோ திருப்பினான். ஆனால் அவைகள் மீண்டும் மீண்டும் வடதிசை காட்டும் திசையறி கருவியின் முள்ளைப்போல அவளையே பார்த்தன. பார்த்தன என்பதை விட விழுங்கின என்பதுதான் பொருத்தமானது.

இப்படியே நாட்கள் சில ஓடின......

அவர்கள் பேச்சைப்பரிமாறிக் கொள்ளவில்லை. ஆனால் பழகிவிட்டார்கள்.

பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருக்கும்போது அவன் இடத்தை அவளுக்குக்கொடுத்துவிட்டு அவன் நின்றுகொண்டே வருவான். நின்றுகொண்டு வருவது அவனுக்குச் சங்கடமாகத்தான் இருக்கும். இருந்தும்கூட அவளுக்குத் தன் இடத்தைக் கொடுத்துச் சங்கடப்படுவது அவனுக்கு இன்பமாக இருந்தது.

நாள் ஆக ஆக அவள் கண்களில் அவனைப் பார்த்த உடனேயே குளுமை நிறையும். இதழ்கள் சிறுநகைபுரியும். உடல் இன்பமடையும்..

இப்பொழுதெல்லாம் பலநாள் பட்டினி கிடந்தவன் பல்சுவை உணவைப் பார்ப்பதைப் போலப் பார்க்கின்ற அந்தப் பார்வைக்காக அவள் வேதனைப்படுவதில்லை. தன்னை அவன் நன்றாகப் பார்க்கட்டும் என்பதற்காகவே வேறெங்கோ பார்ப்பவளைப் போலப் பாவனைகாட்டி அடிக்கடி கடைக்கண்ணால் பார்த்துப் பார்த்து மகிழ்வாள். அப்படி அவன் தன்னைப் பார்ப்பதில் சிறு இன்பமும் கர்வமும் அவளுக்கு இருக்கத்தான் செய்தன.

புன்முறுவலில் தொடங்கிய அவர்கள் நட்பு சாடைமாடையாகப் பேசுவதில் துளிர்த்து, சிரிப்பில் வளர்ந்து சல்லாபமாகப் பேசுவதில் தழைத்தது.

அவள் வண்டியில் ஏறுமுன் அவள் கையில் இருக்கும் கூடையை அவன் வாங்கிக் கொள்வான். வாங்கும்போது வேண்டுமென்றே அவள் கையைத் தொட்டே வாங்குவான். அவள் கையைத் தொடுவதிலே அவனுக்கு அளவுகடந்த மகிழ்ச்சி.

அவன் விரல்கள் அவள் கையிலே படும்போது சிறு நடுக்கமும் பயமும் அவளுக்குத் தோன்றுவதுண்டு. நாள் ஆக ஆக அந்தத் தொடு உணர்வு பயத்தோடு இன்பத்தையும் ஊட்டத்தான் செய்தது.

நகர பஸ்ஸிலே அவர்கள் நட்பு வளர்ந்தது. அரைமணி நேரம் நகரத்தை நோக்கி வரு

கின்ற பஸ்ஸிலே எதை எதையோ பேசவேண்டிய நிலை ஏற்பட்டது. அவள் பேச வெட்கப்படுவாள். ஆனால் அவனே முதன்முதலாகப் பேச்சைத் தொடங்குவான். எதையாவது அவர்கள் பேசிக்கொண்டே வருவார்கள். அவ்வளவு பழக்கம் ஏற்பட்டுவிட்டது அவர்களுக்கிடையில்.

பஸ்ஸில் கழிகின்ற அந்த அரைமணி நேரமும் அவனுக்கு இன்பமான நேரம். 'அவளை விட்டுப் பிரியும்போது நீண்ட நேரம் ஓடி நகரத்திற்கு வரக்கூடாதா இந்த பஸ்? இவ்வளவு விரைவாக வந்து விடுகிறதே' என்று முனகிக்கொள்வான். அலுவலகத்தில் அவளைப்பற்றிய நினைப்பே அடிக்கடி வரும். அவள் அழகிய முகமும், கரிய வண்டு போன்ற கண்களும், சுருண்ட கூந்தலும் தன் முன் மேஜைமீது கிடக்கும் பெரிய பதிவு புத்தகங்களின் மேல் தோன்றித் தோன்றி துன்புறுத்தும். எழுதுகோலைப் பிடித்த கையோடே எதை எதையோ எண்ணிக் கொண்டே இருப்பான். வேலையில் புத்தி ஓடவே ஓடாது. மனித இனம் அடையக் கூடிய பேறுகளில் சிறந்த பேறு அவளை அடைவது என்று நினைத்தான் அவன்.

விடுமுறை நாட்கள் அவனுக்கு வேதனை நாட்களாக இருந்தன.

அவள் மட்டும் என்ன—அவளும் அப்படித்தான் இருந்திருப்பாள். இல்லையென்றால் அவனோடு ஒரு சனிக்கிழமை ஓட்டலுக்கு வந்து சிற்றுண்டி அருந்த ஒத்துக்கொண்டிருப்பாளா?

●

குறிப்பிட்ட புகைவண்டி நிலையத்தில் அவளே முன்வந்து காத்திருந்தாள்.

அது அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது.

டிக்கட் எடுக்குமுன் "நான் உன்னிடம் சில பேசவேண்டும்" என்றாள் அவள். அவள் கன்னங்கள் வெளுத்து இருந்தன. உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"நான் ஒரு ஏழைப் பெண்... மானத்தோடு வாழ்பவள்... நான் சிற்றுண்டிச்சாலைக்கு வருவதற்குத் தடையில்லை......ஆனால்...

என்னை ஏமாற்றக்கூடாது, தெரிகிறதா? முறையற்ற எதுவும் செய்வதில்லை என்று வாக்குக் கொடுக்க வேண்டும்...சத்தியம் செய்ய வேண்டும்......என்ன சொல்லுகிறாய்?" என்றாள் அவள்.

அதற்குமேல் அவளால் பேச இயலவில்லை. அவள் முகம் செம்பருத்திப் பூப்போலச் சிவந்திருந்தது. அவள் எதை எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள். விழிகளிலே பயம் குடியேறியிருந்தது.

அவனுக்கு என்ன பதில் கூறுவது என்றே புரியவில்லை. அடையப்போகும் இன்பத்தைப் பற்றி எண்ணி எண்ணி மகிழ்ச்சியில் நீந்திக்கொண்டிருந்த மனத்திற்குத் திடீர்த் தாக்குதலைப் போல் இருந்தது அந்தச் சொற்கள்.

"சத்தியமா?" அதை நினைக்கும்போதே அவன் திக்குமுக்காடினான். முன்னாள் இரவு அவன் கட்டிய கோட்டைகள் இடிந்து விழுவதைப்போல் தோன்றியது அவனுக்கு. கண்ட இன்பக் கனவுகள், கற்பனை எண்ணங்கள் முடிவடையும் நேரத்தில்தானா இந்தச் 'சத்தியம்' குறுக்கிடவேண்டும் என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டான். என்ன செய்வது என்று அறியாமல் விழித்தான்.

அவள் இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய நேரத்தில் மனிதர்கள் போடுகின்ற சுயநலக் கணக்கை அவன் மனம் போட்டுச் சரிபார்த்துக்கொண்டிருந்தது.

அவன் தயங்குவதைப் பார்த்த அவள் "சரி, அப்படியானால் நான் வீட்டிற்குத் திரும்பிவிடுகிறேன். நீ தான் சத்தியம் செய்யத் தயங்குகிறாயே" என்றாள் அவள்.

அவள் குரலில் கலக்கம் தோய்ந்திருந்தது. பயந்த விழிகளின் கடையில் நீர் தத்தளித்துக்கொண்டிருந்தது. அவள் அவன் வாயையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் சத்தியமாகச் சொல்கிறேன். உனக்குப் பிடிக்காத எதையும்நான் செய்யமாட்டேன். என்னை நம்பு. இது சத்தியம். நான் உன்னை மோசம் செய்யவே மாட்டேன்" என்றான். அவள் கையைப்பிடித்து அவள் உள்ளங்கையில் தட்டி—"இது சத்தியம்" என்றான்!

ஏதோ பெருஞ்சுமையை இறக்கி வைத்தவளைப் போல, "உண்மையாகவா? மெய்தானா?" என்றாள்.

அவன் பறவையைப் பிடிக்கச் செல்லும் பாம்பைப்போல, எலியைப் பிடிக்கச் செல்லும் பூனையைப்போல அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான்; சிரித்தான். "இன்னுமா நீ என்னை நம்பவில்லை—சத்தியமாகச் சொல்லுகிறேன், உனக்குப் பிடிக்காத எதையும் நான் செய்யமாட்டேன்" என்றான்.

"அப்படியானால் வருகிறேன். போகலாம். டிக்கட் எடு" என்றாள் அவள்.

அவள் கண்களிலே நிலைத்திருந்த பயம் சிறிது சிறிதாக மறைந்தது.

புகைவண்டி ஓடிக்கொண்டே இருந்தது—பேச நினைத்தார்கள். ஆனால் வண்டி நிறைய மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் அவர்கள் பேச முடியவில்லை. அவன் இரண்டொரு தடவை வார்த்தை கொடுத்துப் பார்த்தான். என்றுமில்லாத வெட்கம் அன்று அவளிடத்தில் இருந்தது. அவள் அவன் பேச்சைக் கேட்காதவள்போலச் சன்னலின் வழியே தலையை நீட்டி எதையோ பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் கண்கள் மட்டும் அவனிடத்தில் அடிக்கடி வந்து பேசிக்கொண்டு தான் இருந்தன. வாயால் பேசி இருந்தால்கூட அவ்வளவு பேசி இருக்க முடியாது. அவ்வளவு பேச்சைப் பேசி மகிழ்ந்தன அந்த நான்கு கண்களும்.

வண்டி நிலையத்தில் நின்றது. அவர்கள் இறங்கினார்கள்.

அவள் அவனைத் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தாள். என்றாலும் அவள் கால்களிலே தயக்கம் இருக்கத்தான் செய்தது.

வழி நெடுக மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்ததால் அங்கும் அவர்கள் பேச முடியவில்லை. நடந்துகொண்டிருந்தார்கள்...

மாலைச் சூரியன் தன் மங்கிய செந்நிறக் கதிர்களை இலைகளின் மீதும் சிறு புற்களின்மீதும் நீட்டிச் சிரித்துக்கொண்டிருந்தது; அருகிலே ஓடும் ஆற்று நீருக்குத் பொன்னிறமூட்டிப் பூரித்தது. உயிர்களின் உடலில் உராய்ந்து மாலைக்கு வாழ்த்துக் கூறி வந்தது தென்றல்.

அந்த ஆற்றங்கரை நெடுக அவர்கள் ஒருவரை ஒருவர் நெருங்கியபடி நடந்துகொண்டே இருந்தார்கள். அவன் காற்றிலே குலையும் தன் தலையை விரலால் கோதிச் சீர்படுத்திக்கொண்டே நடந்தான்.

அவள் காற்றிலே பறக்கும் ஆடையை இழுத்துச் சீர்படுத்திக்கொண்டே நடந்தாள்.

பொன்னால் செய்த மீன்கள் புத்துயிர் பெற்றதைப்போலக் கூட்டம் கூட்டமாக மீன்கள் ஆற்று நீரிலே மேய்ந்துகொண்டிருந்தன—துடுக்குச் சேல்கள் நீர் மட்டத்தில் துள்ளிப் பாய்ந்து ஆற்று நீரைக் கரையில் தெளித்தன.

உலகத்தை மறந்து சிறகடித்துத் திரியும் இரண்டு பறவைகளைப்போல அவர்கள் வாய் விட்டுச் சிரித்தும் பேசியும் ஒருவரை ஒருவர் உராய்ந்துகொண்டே நடந்தார்கள்.

"நான் ஒரு பைத்தியக்காரி" என்றாள் அவள்.

"ஏன்? எதற்காக?"

"இப்படி ஒரு ஆணோடு தனித்து வருவது கூடாது. பைத்தியக்காரச் செயலல்லவா இது!" என்று சிரித்துக்கொண்டே கூறினாள் அவள்.

"சீ! இதிலென்ன தவறிருக்கிறது? இது இயற்கைதானே."

"இல்லை! இல்லை! தவறுனது இது...அதிலும் நான்......நான் தவறி நடக்கக் கூடாது...இப்படித்தான் பல பெண்கள்...தங்களைப் பாழாக்கிக்கொண்டார்கள்...உனக்குத் தெரியுமா?... வீட்டிலே என் அன்னை...கவலையே குடி கொண்ட என் அன்னை தனியாக இருக்கிறுள்... நான் உன்னோடு சுற்றுகிறேன்... எனக்கு வீட்டு நினைவாகவே இருக்கிறது...என்மேல் கோபித்துக்கொள்ளாதே. நான் என்னவோ உன்னோடு மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளத்தான் நினைக்கிறேன்...ஆனுல் என் மனம் அன்னையை எண்ணி எண்ணி அலைபாய்கிறது...நீ சிரிக்கும் போதெல்லாம் உன்னோடு சிரிக்கத் தோன்றுகிறது—சிரிக்க முயற்சிக்கிறேன். என்னுல் சிரிக்க முடியவில்லை...நான் உன்னோடு வந்தது தவறு......பைத்தியக்காரத்தனம்" என்றுள் அவள்.

அவள் மனதிலே கவலையும் மகிழ்ச்சியும் ஒன்றோடொன்று போரிட்டுக்கொண்டிருந்தன.

"என் உயிரல்ல!" என்று கட்டியணைத்தான் அவன்.

அவன் பிடிப்பிலிருந்து விரைவாக விலகிப் "பார்த்தாயா?... அதற்குள் சத்தியத்தை மறந்துவிட்டாயே!" என்றுள் அவள்.

அவன் குறுகுறுத்த விழியிலே கோபச் சாயல் குடிகொண்டிருந்தது.

அவர்கள் சிற்றுண்டிச் சாலையை நெருங்கினுர்கள்.

அது ஆற்றங்கரைக்கருகில் மற்றவர்கள் அடிக்கடி வராத ஒரு நடுத்தர ஓட்டல். ஓங்கி வளர்ந்த மரங்களுக்கிடையில் பார்ப்பதற்கு அழகாகத்தான் இருந்தது அந்த உணவு விடுதி.

புதிதாக ஒருவரை ஒருவர் நெருங்கி வந்ததால் ஏற்பட்ட உணர்வு; பூமணம் வீசும் தென்றல்; பொற்கதிர் சிந்தும் மாலை; இத்தனையும் சேர்ந்து அவர்களுக்கு என்னவோ ஒரு மாதிரியாக இருந்தது. அவர்களையும் அறியாது சிறு மயக்கம் மெல்லத் தலைக்கேறிக் கொண்டிருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை. இடை இடையே ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். இதழிடையே சிரிப்பு அரும்பி அரும்பி மறைந்தது.

ஓட்டலில் உண்டு முடித்த பிறகு அவர்களையும் அறியாமல் அவர்கள் மனதிலே மகிழ்ச்சி துளிர்த்துக்கொண்டிருந்தது.

ஆற்றங்கரையோரமாகச் சற்றுத் தொலைவிலே தோன்றிய தோப்பை நோக்கி அவர்கள் கால்கள் நடந்தன.

நடந்துகொண்டே "உன் பெயரென்ன?" என்றுன் அவன்.

"லூய்ஸ்"

அவன் வாய் "லூய்ஸ்" "லூய்ஸ்" என்று முணுமுணுத்தது. வேறென்றும் பேசாமலே அவன் நடந்தான்...

அந்த ஆறு நீண்ட அரை வட்டத்தைச் சித்தரித்துக் கொண்டே நெடுந்தொலைவு ஓடிக்கொண்டிருந்தது. வழியிலே

உள்ள ஒன்றிரண்டுஉயர்ந்தமாளிகையின் மதிற்சுவரில் மோதி விழுந்து களித்து இரைந்தது. நீண்ட நிலைக்கண்ணாடியைப் போல, அந்தக் கட்டிடங்களின் அமைப்பு உச்சி முழுமையும் தன்னிலடக்கிக்காட்டிக் கொண்டிருந்த அந்த ஆற்றுப்பரப்பிலே ஆடி ஆடித்தோன்றும் மாளிகை மரங்கள் பல வளைவான மரங்களைப் போலத் தோன்றி இன்பமூட்டிக் கொண்டிருந்தன — நீர் மட்டத்திற்கு மேலே எங்கோ பூத்த ஒன்றிரண்டு நீர்ப்பூக்கள் வாடி வதங்கி நாணத்தால் தலை கவிழ்ந்திருந்தன.

அவள் வழிநெடுகப் புதரிலே பூத்திருந்த பூக்களை எல்லாம் பறித்துப் பறித்துக்கத்தையாகக் கட்டிக்கொண்டே நடந்தாள்.

அவன் செழித்து வளர்ந்த பசும் புல்வில் விடப்பட்ட குதிரைக் குட்டியைப்போல இன்பமாகப் பாடிக்கொண்டே நடந்தான். தலைக்கு நேரே தாழ்ந்த மரக்கிளைகளைத் தாவித் தாவிக் குதித்துப் பிடிப்பான். எட்டிய கிளையைத் தன்னோடு இழுத்துவிட்டுப் பார்த்துச் சிரிப்பான். மனதைப்போல அவன் கால்களிலும் சிறிது மயக்கமும் துடிதுடிப்பும் இருந்தன.

அவர்களுக்கு இடப்புறத்தில் மலைச்சாரலில் பயிரிடப்பட்ட திராட்சைத் தோட்டம் ஆற்றைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

அவன் திகைத்து நின்றான்... "இதைப் பார்...என்ன அழகாக இருக்கிறது..." என்றான்.

திராட்சை பழுத்து மாறி இருந்தது. ஒண்டிக் குடித்தனம் இருப்பவர்களைப்போல அந்தத் திராட்சைப் பந்தல் நிறையப் பூங்கொடிகள் பின்னிப் பின்னி ஏறிப் படர்ந்து பூத்துக் குலுங்கிச் சிரித்தன. தொலைவிலே தோன்றுகிற சிற்றூருக்கு வழி நெடுகப் பச்சைப் பட்டாடை விரித்ததைப்போல அத் தோட்டம் காட்சியளித்தது. இடை இடையே பந்தலின் கிளைகளில் ஏறிப் பூத்து எட்டிப் பார்க்கும் செந்நிறப் பூங்கொத்துக்கள் வரிசையாக ஏற்றிய அழகிய மின் விளக்குகள் போல அந்த மாலை மங்குகின்ற வேளையில் மனதிற்கு இன்பமாக இருந்தன.

"அடடா! என்ன அழகு" மெய்மறந்த நிலையிலே இச்சொற்றொடர் அவன் வாயிலிருந்து வெளிவந்தது.

அவ்வளவு அழகாக இருந்தது அந்த ஆற்றங்கரைக் காட்சி.

நகரத்திற்கு வேண்டிய பூக்களை அந்த மலைச்சாரலில் வாழ்கின்ற குடியானவர்கள் தங்கள் கைவண்டியில் கொண்டுவந்து குவித்துப் பணமாக்குவார்கள். அப்பூக்கள் நிறைந்த குன்றுகள் அந்த ஏழைக் குடியானவர்களுக்கு உணவூட்டும் வள்ளல்களாக என்றும் இருந்து வந்தன. மற்ற மனிதர்களைப்போல அக் குன்றுகள் தங்கள் வளத்தை முடக்கி ஒரு சிலருக்கு உதவி வேறு சிலரை வறுமையில் ஆழ்த்தியதில்லை. எல்லோருக்

கும் பொதுவாகவே வழங்கி வந்தன அக்குன்றுகள்.

அவர்கள் அந்தக் குன்றை நோக்கி ஓடினார்கள்.

ஒரு சிறு பாட்டை மரங்களுக்கிடையே மறைந்து மறைந்து சென்று கொண்டிருந்தது.

பாட்டையைத் தொடர்ந்து ஓடினார்கள்.

பூத்துக் குலுங்கிய சிறு பொய்கை யொன்று அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. உட்கார்ந்தார்கள்......

பல ஆயிரக்கணக்கான கொசுக்கள் அவர்கள் தலைக்கு மேல் கூட்டமாக மெல்லிய இசை மீட்டி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. வயற் புறக் காற்று மெல்லிய பூ மணத்தை வாரி இறைத்துக்கொண்டிருந்தது.

தொலைவிலே இருந்த மாதா கோவில் மணி அடித்தது.

புற்றரையிலே அவள் புரண்டு புரண்டு படுத்து இயற்கைக் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து பூரித்துக்கொண்டிருந்தாள்.

அவன் அவளருகே படுத்து எதை எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். மெல்ல அவளை நெருங்கி இறுக அணைத்துக்கொண்டான்.

அவள் அறிவிழந்து தன்னை மறந்துகிடந்தாள்—இளமை, இயற்கைதூண்டிய உர்ணவு, கனிவான பேச்சு, கையணைப்பு இத்தனையும் அவள் அறிவை மறைத்தன. செயலற்றுக் கிடந்தாள் அவள். அவளுக்கு வேறெந்த நினைவும் தோன்றவில்லை. உடல் முழுதும் ஏறிய உணர்வு, தனிமை, அவள் அறிவை செயலை மறைத்தது. அவள் செயலற்றுக் கிடந்தாள். இன்ப உணர்வு அவள் உடலிலே, உணர்விலே தளும்பிக் கொண்டிருந்தது.

அவள் விழிகள் சிறிது மூடிக் கிடந்தன. உணர்ச்சி வெறி உடலை முடக்கியது. அசைவற்றுச் சிந்தனை தடைப்பட்டுப் பாரிச நோயாளிபோல அவள் அவன் அருகில் கிடந்தாள்.

சிறிது நேரம் சென்ற பிறகே அவள் நிலையை அவளால் உணர முடிந்தது.

திடுக்கிட்டெழுந்தாள். தன் தவறை உணர்ந்தாள். முகத்திலே அறைந்து கொண்டு அழுதாள், விம்மினுள், கத்தினுள். தன் தவறை எண்ணி எண்ணித் தலையிலே அடித்துக் கொண்டாள்.

அவன் அவளுக்கு ஏதோ சமாதானம் சொல்லிப் பார்த்தான்.

அவள் எழுந்து நடந்தாள். அவன் அவளை மறித்தான்.

"ஊம்......முடியாது. வீட்டிற்குப் போகவேண்டும்" என்ருள் அவள். நீண்ட பெருமூச்சு விட்டாள்......எழுந்து விரைவாக நடந்தாள். அவள் வாய் "ஐயோ...கடவுளே...ஐயோ..." என்று முணுமுணுத்தது.

"லூய்ஸ்......லூய்ஸ்........இரு போவோம்..........இரு போவோம்......" என்று கெஞ்சினுன் அவன்.

அவள் அவனைத் திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டே இருந்தாள்.

அவள் கால்கள் வரும்போது இருந்ததைவிட மிக விரைவாக அடிபெயர்த்து வைத்து நடந்தன. அவள் கண்களிலேமருட்சி, பயம், வேதனை இத்தனையும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தனவே ஒழிய தலை தூக்கவில்லை.

அவள் நடந்து கொண்டே இருந்தாள்......

புகைவண்டி நிலையத்திற்கு வந்ததும், அவனிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லிக் கொள்ளாமல் டிக்கட் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறிவிட்டாள் அவள்.

★

மறுநாள் அவளை அவன் நகர பஸ்ஸில் சந்தித்தான்.

அவள் மிகவும் மெலிந்து இருப்பதாக, முகம்மாறி இருப்பதாகப்பட்டது அவனுக்கு.

"நான் உன்னிடம் பேச வேண்டும். வழியில் இறங்கிவிடுவோம்" என்ருள் அவள்.

இறங்கினுர்கள். அங்கு மக்கள் நடமாட்டமே இல்லை.

"இன்ருேடு என்னை மறந்து விடு. இனிமேல் நாம் சந்திப்பது கூடாது. நீ உன் வாக்கை மீறி என்னைக் கெடுத்து விட்டாய். நீ இப்படிச் செய்வாய் என்று தெரிந்திருந்தால் நான் வந்திக்மாட்டேன். ஏதோ ஒழுங்கோடு நடந்துகொள்வாய் என்று நினைத்தேன்......" என்ருள். நீண்ட பெருமூச்சு அவள் நெஞ்சைப் பிளப்பதைப் போல வெளி வந்தது.

"ஏன்—எதற்காக—உன்னை மறந்துவிடச் சொல்கிருய்?... ஊம்...முடியாது......முடியவே முடியாது".....என்ருன் அவன்.

"மீண்டும் தவறிழைக்க நான் விரும்பவில்லை.........வாக்கைத் தவறமாட்டாய்...நீ ஒரு ஆண்மகன் என்று நம்பினேன்...... ஏமாந்தேன்...ஒழுங்கை மீறிய உன்னேடு உறவு வேண்டவே

வேண்டாம்......"

"என் கண்ணல்ல...நீ என் உயிர் நான் உடல்...இதோபார்! தொலைவிலே தோன்றுகின்ற வயல் வெளிக்கு மழை எப்படியோ அப்படி நீ என் வாழ்விற்கு. உன்னை மறந்து உயிர் வாழ என்னால் முடியாது. என் விழியைப்பார். என் விழியிலே நீ அழியாத ஓவியமாய் நிலைத்திருப்பதைக் காண்பாய். இதோ என் இதயத்தில் காது கொடுத்துக் கேள். அதன் ஒவ்வொரு அசைவிலும், 'லூய்ஸ் லூய்ஸ்' என்று ஒலியையே கேட்டாய்'

"இல்லை......வேண்டாம்..... நான் அதற்கு மீண்டும் உடன்படமாட்டேன்..." என்றாள்.

திருடியே அறியாதபுதுத்திருடன் திருடிவிட்டுத் தன் தீச்செயலை எண்ணி எண்ணித் திண்டாடுவதைப் போல இருந்தது அவள் தோற்றம்.

அவன் அவளிடத்தில் மீண்டும் மீண்டும் வர்ணனைப் பல்லவி பாடினான். குற்றமற்ற அவள் உள்ளத்திற்கு ஆசை மொழிகளை அள்ளி வீசினான். அவள் உணர்வைத் தூண்டினான்...கையைப் பிடித்தான்... கன்னத்தைக் கிள்ளினான்....சிரிப்பூட்டினான்... சிலேடை மொழி பேசினான்... "நான் உன்னை மணந்து கொள்ளப்...போகிறேனே, நீ எதற்காக இப்படிப் பயப்படுகிறாய்...?கடவுளறியச் சொல்லுகிறேன். நமதுள்ளம் ஒன்றிவிட்டது. இனி நம்மை யாராலும் பிரிக்கமுடியாது. நீ என் மனைவி, நான் உன் கணவன். உனக்கு இருக்கிற பொறுப்பு எனக்கு இல்லையா? கவலைப்படாதே...... நீ எதற்காக இப்படிப் பயப்படுகிறாய்......என் கண்ணல்ல...... நீ என்னை நம்பு" என்றான். அவள் மெல்லிய கைகளை எட்டிப் பிடித்தான்.

"விடு" என்று அவன் கைகளை அவள் உதறிவிட்டுச் சென்று விட்டாள்.

அவள் அவன் கண்களுக்குத் தென்படவே இல்லை. நகரபஸ்ஸில் முன்பெல்லாம் வருவதைப் போல 'வருவாள் வருவாள்' என்று எதிர்பார்த்து அவன் கண்கள் சோர்ந்தன. "அவள் வீட்டிற்குத் தேடிப்போ" என்றது அவன் மனம். ஆனால் அவள் எங்கே வசிக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியாது.

ஒரு வாரம் வரையில் எதிர்பார்த்து அவன் மனமும் கண்களும் சலித்தன.

"ஊம்...பறந்து விட்டது பறவை" என்று அவன் வாய் முணுமுணுத்தது. இப்படி அவசரப்பட்டிருக்கக் கூடாது என்று அறிவுறுத்தியது சுய நலம். புது மாடு மருண்டு விட்டது—சமாதானம் கூறியது அவன் மனம்.

ஒன்பது நாட்களுக்குப் பிறகு யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து வந்தான் அவன். கதவைத் திறந்தான்.

அவள் நின்று கொண்டிருந்தாள். அவளை அப்படியே வாரி அணைத்தான்.

இந்த முறை அவன் கைகளை அவள் உதறித் தள்ளவில்லை. அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு "உண்மையாகச்சொல். என்னை மணந்து கொள்ளுகிருயா? மோசம் செய்ய மாட்டாயே?...மோசம் செய்ய மாட்டாயே?" என்று கெஞ்சினுள்.

உணர்ச்சி வேகம் அவள் கண்களிலும் உதட்டிலும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அன்பும் பரிவும் அவள் சொற்களிலே தவழ்ந்தன. அவன் கைகள் அவன் உடலைத் தடவி இன்பமடைந்தன; இறுக அணைத்தன.

"அது அறியச் சொல்லுகிறேன்... இது அறியச் செல்கிறேன்... நீ என் மனைவி" என்று அறையிலிருந்த அத்தனை பொருள்களையும் கூட்டிக் காட்டிச் சத்திய மழை பொழிந்தான் அவன்.

நாட்கள் ஒவ்வொன்றும் இன்பமாக ஓடிக்கொண்டிருந்தன. மணி விரைவாக ஓடுவதாக ஒவ்வொருவரும் மாறி மாறி நினைத்ததுண்டு. வாய்விட்டும் கூறினுர்கள்.

அறுபதும் முப்பதும் தொண்ணூறு நாட்கள் என்பார்களே அதைப்போல மூன்று திங்கள் இன்பச் சிறகடித்து எதைப் பற்றியும் கவலைப்படாது பறந்து கொண்டிருக்கும் ஜோடிப் புறாக்களைப் போல அவர்கள் தங்களை மறந்து தலைகால் தெரியாது கூத்தடித்துக்கொண்டிருந்தார்கள்.

அவள் தாயாகி விட்ட செய்தி அவனுக்குத் தெரிந்தது. அன்று முதல் அவன் ஒரு மாதிரி இருந்தான். ஆனுல் அதை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

அவளுக்குச் சிறிது கலக்கம் இருந்தும் கூட இன்பம் இருந்தது. அவனை அவள் நம்பினுள். இன்னும் சில நாளில் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தப் போகிறோம் என்று நினைக்கும் போது அவள் உடல் பூரிப்பில் மிதக்கும்.

அவன் பல இரவு இதைப் பற்றிச் சிந்தித்தான். எப்படியாவது அவள் உறவை அறுத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு கட்டினுன். அது அவனுல் முடியவில்லை. அவ்வளவு அன்பாக அவள் நடந்து கொண்டாள். அடிக்கடி வந்து இன்பத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தாள்.

ஓர் இரவு அவன் குடியிருந்த வீட்டைக் காலி செய்துவிட்டு யாருக்கும் தெரியாது ஓடி விட்டான்.

மறு நாள் வழக்கம் போல அவள் வந்தாள். வழி நெடுக விரைவிலே திருமணம் செய்து கொள்ள அவனிடம் சொல்ல வேண்டும், மணநாளை நிச்சயப்படுத்தி விடவேண்டும், மணம் செய்து கொண்டு எப்படி எப்படியெல்லாம் இருப்போம், பிறக்கப் போகிற குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்—இப்படிப் பலப் பல எண்ணிக் கொண்டே வந்தாள்.

வீடு காலியாக இருந்தது.

அக்கம் பக்கம் விசாரித்தாள். யாரும் அவளுக்குத் தக்க பதில் கூறவில்லை. இடிவிழுந்தவளைப் போல ஆனாள் அவள்.

தான் வஞ்சிக்கப்பட்டதை ஏமாற்றப்பட்டதை அப்பொழுது தான் உணர்ந்தாள் அவள்......

ஆண் இனத்திற்குப் பலப்பல அர்ச்சனைப் படலம் பாடியது அவள் மனம். தன் அறிவற்ற செயலைஎண்ணி எண்ணிக் குன்றினாள். பைத்தியம் பிடித்தவளைப் போலச் செயலற்று அந்த விடத்திலேயே தலைமேல் கைவைத்துக் குந்தி விட்டாள்.

இனி அந்தக் கயவனைத் தேடிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தாள் அவள். வெறி பிடித்தவளைப் போலத் தன் வீட்டை நோக்கி ஓடி வந்தாள். தன் தாயின் இரு கால்களையும் பற்றிக் கொண்டு கதறினாள். கண்ணீர் வடித்தாள். உண்மையைக் கூறினாள்.

"அடி பாவி!" என்று அலறியது கிழவியின் குரல்.

சில மாதங்களுக்குப் பிறகு ஆண்மகவு பிறந்தது.

★

நாட்கள், வாரங்களை, வாரங்கள் திங்களை, திங்கள் ஆண்டைத் துணைக்கழைத்துக் கொண்டே நகர்ந்தன.

பல ஆண்டுகள் கழிந்தன என்பதை அவன் தலையிலே இருந்த ஒன்றிரண்டு வெண்மயிர்கள் அவனுக்கு உணர்த்தின. எந்த மாற்றமுமின்றி அவன் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான்.

அடங்கி ஒடுங்கி அன்பு மனைவியோடு இல்லறம் நடத்துகின்ற வாழ்க்கை அவனுக்குப் பிடிக்கவில்லை. கட்டின்றி விடப்பட்ட காளையைப்போல அவன் வாழ்ந்தான். ஓட்டலில் உண்பது, ஓய்வு நேரங்களில் ஊர் சுற்றித் திரிவது, தன் அறையிலே வந்து உறங்குவது, இதுவே அவன் வாழ்க்கையாக இருந்தது.

ஒவ்வொரு நாளும் பழக்கமான அதே நேரத்திற்கு எழுந்திருப்பது, அலுவலகத்திற்குப் போவது, அந்தப் பழைய காவற்காரனைத்தாண்டி அலுவலக அறையில் நுழைவது, நாற்காலியில் உட்கார்ந்து வேலையை முடிப்பது, திரும்பிவருவது, உண்பது உறங்குவது......

மணிப் பொறியின் முள் எண்களைத் தாண்டிச் செல்வதைப் போல அவனும் இந்த வேலைகளைச் செய்து கொண்டே இருந்தான்.

இந்த உலகத்தில் தான் தனி, தன்னோடு வேலை செய்கின்ற கருத்தொற்றுமை இல்லாத மற்ற தோழர்களிடையிலும் தான் தனி என்பதை அவன் உணராமலில்லை. தன் முதுமைக்காக மாதா மாதம் நூறு பிரான்கள் மீத்து வைத்து வந்தான்.

ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் பூங்காவிற்கு உலாவச் செல்வான்.

அழகிய பெண்கள், ஆடம்பர மனிதர்களைக் கண்குளிரப் பார்ப்

பதற்காகவே அவன் அங்கு அடிக்கடி செல்வான். மறுநாள் தன்னுடன் பணியாற்றும் தோழர்களிடம், நேற்றுப் பூங்கா மிகப் பொலிவாக இருந்தது என்று கூறிப் பூரிப்படைவான்.

இப்படியே அவன் வாழ்க்கை சென்று கொண்டிருந்தது.

பார்த்துப் பார்த்துச் சலித்த பூங்கா பழமையாகப்பட்டது அவனுக்கு. அன்று வழக்கத்திற்கு மாருக வேருெரு பூங்காவிற்குச் சென்ருன்.

நீண்ட பெஞ்சுகளில் ஆயாக்களும் தாய்களும் குந்தித் தங்கள் எதிரிலே விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைகளைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு பெண் பத்து வயதுச் சிறுவனையும் நான்கு வயதுப் பெண் குழந்தையையும் அழைத்துக்கொண்டு அந்தப் பூங்காவிற்கு வந்தாள்.

அவன் அவளைப் பார்த்தான். தொலேவில் வரும்போதே அவளை எங்கோ பார்த்ததைப் போல நினைவு வந்தது அவனுக்கு.

அவனைத் தாண்டிச் சென்ருள் அவள்...

ஆம்......அவள்.......அவளே தான்!.........

எதிர்பாராத இந்தச் சந்திப்பு அவனைக் குலுக்கியது. அவனுல் நிற்க முடியவில்லே. அருகிலிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தான். அவனையும் அறியாமல் அவன் வாய் “ஹாய்ஸ்” என்று முணுமுணுத்தது.

அவள் அதனைக் கவனிக்கவில்லே. பூங்காவிலிருந்த பெஞ்சியின்மேல் போய் உட்கார்ந்தாள். பையன் பொறுமையாக அவள் அருகிலே நின்று கொண்டிருந்தான். பெண் குழந்தை மண்ணிலே விளையாடிக் கொண்டிருந்தது.

அவளை நெருங்கிப் பார்க்க ஆசை தூண்டியது. சற்று மறைவாக வந்து அவளைப் பார்த்தான் அவன்.

ஆம்...அவள்...அவளே தான்-! எளிமையான உடை! ஒழுக்கம் நிறைந்த உயர்குலப் பெண் போல அவள் காட்சியளித்தாள்.

நெருங்கத் தைரிய மில்லாது சற்றுத் தொலேவிலேயே வைத்த கண் வாங்காது அவளேயே பார்த்துக்கொண்டு நின்ருன் அவன்.

இவன் நின்று கொண்டிருந்த பக்கமாகத் தலேயைத் தூக்கி எதையோ பார்த்துக் கொண்டிருந்தான் பையன்.

அந்தப் பையன் அப்படியே தன் உருவைப் பறித்துக் கொண்டு வந்திருக்கிருன் என்று அவன் வாய் முணுமுணுத்தது. ‘அவன் என் மகன்! வேறு அவன் எப்படி இருக்கமுடியும்?’ என்று தனக்குள்ளாகவே கேட்டுக் கொண்டான். அவன் அகக்கண் தன் அறையில் இருக்கும் தன் சிறு வயதுப் போட்டோவையும் பையனேயும் ஒத்திட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது.

நீண்ட நேரம் அருகிலே இருந்த மரத்தில் மறைந்து காத்துக்கொண்டிருந்தான்.

இருட்டு வருவதற்குமுன் அந்தக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவள் வீட்டிற்குத் திரும்பினுள்.

அவன் கால்கள் அவளைத் தொடர்ந்தன. அவள் வீட்டைத் தெரிந்துகொண்டு திரும்பினுன் அவன்.

இரவெல்லாம் அவன் கண்கள் மூடவே இல்லை. சிறுவனின் உருவம் தோன்றித் தோன்றி அவனைத் தொல்லைப்படுத்தியது. என் மகன்!... உண்மையில் என் மகன் தானு?... இதை எப்படித் தெரிந்து கொள்வது? இதைப்பற்றியே அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். பொழுதும் விடிந்தது—

அவள் வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் சென்று விசாரித்தான். அவளே லூய்ஸ் என்று விளங்கிற்று. அவளை மணந்து கொண்ட மனிதன் யோக்கியன்; சிறந்தவன். அவளுக்கு ஏற்பட்ட கொடுமையைத் தெரிந்து, அவளை மன்னித்து மணந்து கொண்டான். அவளை ஏமாற்றிய அந்த அயோக்கியனுல் ஏற்பட்ட பையனையும் அவன் பெருந்தன்மையோடு தன் மகனைப் போல அன்பு காட்டி வளர்த்து வருகிறுன் என்று அக்கம் பக்கத்தவர்கள் கூறினுர்கள்.

ஆயிரம் ஈட்டி கொண்டு தாக்குவதைப் போல அந்தச் சொற்கள் அவனைத் தாக்கின.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அந்தப் பூங்காவிற்கு அவன் வருவான். அவளைப் பார்ப்பான். அந்தப் பையனை வெறிக்க வெறிக்கப் பார்ப்பான். அடக்க முடியாத ஆசை அவன் உள்ளத்திலே எழுந்து தலை விரித்தாடும். அந்தப் பையனைத் தூக்கி வாரி அணைக்கக் கைகள் துடிக்கும். வாய் முத்தமிட ஏங்கும். கண்கள் அந்தப் பையனை அப்படியே விழுங்கிக் கொண்டிருக்கும். காதுகள் அவன் சொற்களைக் கேட்டுக் கேட்டு மகிழும். அந்தச் சிறுவனைத் திருடிக்கொண்டு ஓடிவிட வேண்டுமென்று கூட அவன் திட்டமிட்டதுண்டு.

தனித்திருக்கும் போதெல்லாம் பையனின் நினைவாகவே இருந்தான் அவன். அலுவலகத்தில் வேலை செய்யப் பிடிக்கவில்லை அவனுக்கு. வீட்டிற்கு வந்ததும் தன் வாழ்க்கையை நினைத்து நினைத்து வெதும்புவதே வேலையாகிவிட்டது. அந்தப் பையனின் நினைவு...... குழந்தைப்பற்று...... அதிலும் ஆண்மகவல்லவா? பாசம் அவனை விடவில்லை. அரித்துக்கொண்டே இருந்தது. உயிர்களின் உடலிலே ஊறிப்போன அந்தப் பிள்ளைப்பற்று அவன் மனதைக் குத்திக் காட்டியது. பொறுமையை வளர்த்தது. சகிக்க முடியாத நிலையிலே சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தான் அவன்.

ஒருநாள் வழக்கம்போல அவள் பூங்காவிற்கு வந்து கொண்டிருந்தாள் துணிந்து அவளை நெருங்கினுன். அவள் வழியை மறித்து நாக்குளறிக் கொண்டே "என்னைத் தெரிகிறதா உனக்கு?" என்றுன்.

அவள் அவனைப் பார்த்தாள்... "ஆ...நீயா?"......என்றாள். புருவங்கள் பயத்தால் விரிந்தன. ஏதோ பயங்கர உருவைக் கண்டதைப் போலப் பதறினாள். கூச்சலிட்டாள். தன் இரண்டு குழந்தைகளின் கைகளைப்பற்றி இழுத்துக்கொண்டே ஓடினாள். திரும்பிப் பார்க்காமல் ஓடிவிட்டாள்.

அதன் பிறகு அவளை அந்தப் பூங்காவில் அவனால் பார்க்க முடியவில்லை. வந்து வந்து பார்த்து ஏமாந்தான். அவள் அங்கு வரவே காணோம்.

இரவும் பகலும் அவனுக்கு ஒன்றாகவே பட்டது. பிள்ளைப் பாசம் தகப்பனைப் பிடுங்கித் தின்றது. தன் பிள்ளையை வாரி அணைக்க, முத்தமிட இந்த வையமே குறுக்கிட்டாலுங்கூட எதிர்க்கக் காத்திருந்தான் அவன். தன் பிள்ளைக்காகத் தன் உயிரைக் கேட்டால்கூடக் கொடுக்கத் தயங்க மாட்டான். எத்தனை இன்னல்கள், இடையூறுகள் வந்தாலும் தன் மகனுக்காகத் தன்னையே உரித்தெடுத்து வந்துள்ள அந்தப் பையனுக்காகச் சமாளிக்கும் உள்ளம் வளர்ந்திருந்தது அவனுக்கு.

தகப்பன் உள்ளம் தனிப்பட்டதுதான். பிச்சை எடுக்கும் தந்தை தான் பட்டினியாக இருந்துங்கூடத் தனக்குக் கிடைத்த பிடி சோற்றைப் பிள்ளைக்குக் கொடுத்து மகிழ்கிறான். உழைப்பதும் ஊரை ஏய்ப்பதும் மக்களுக்காகத் தானே!

அவளுக்கு அவன் கடிதம் எழுதிப் பார்த்தான். பதில் இல்லை. இருபது கடிதங்களுக்குப் பிறகு, இனி ஒன்றும் நடவாது என்று பட்டது. இதனால் நமக்குச் சாவே வந்தாலும் சரி, விடுவதில்லை; கடைசி வரையில் ஒரு கை பார்த்து விடுவது என்று எண்ணினான். கடைசி முறையாக அவள் கணவனுக்கு எழுதிப் பார்ப்போம் என்ற முடிவுக்கு வந்தான்.

"அன்புள்ள ஐயா,

என் பெயரைப் பார்த்ததுமே உங்களுக்கு அருவருப்பும் ஆத்திரமும் உண்டாகும்.

நான் உண்மையில் துன்பத்தால் துளைக்கப்பட்டவன். கொடியவன்—வஞ்சகன்-அற்பன்-அயோக்கியன்.

பத்தே பத்து நிமிடங்கள் உங்களைச் சந்திக்க இசையுங்கள். உங்களைத் தவிர வேறு இல்லை.

அன்புள்ள,

......................"

இப்படி எழுதிக் கையொப்பமிட்டு அவர் முகவரிக்கு அனுப்பிய பிறகு தான் அவன் மனதிலே சற்று அமைதி தோன்றியது.

மறுநாள் அவன் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அவசர அவசரமாகப் பிரித்தான். உடலுக்கு இரத்தத்தை இதயம் மிக விரைவாக அனுப்பிக் கொண்டிருந்தது.

அன்புள்ள ஐயா, செவ்வாய்க் கிழமை மாலை ஐந்து மணிக்கு வருக என்று அதில் எழுதியிருந்தது.

அவன் உள்ளத்திலே துளிர்த்த மகிழ்ச்சியின் மறுபதிப்பு உதட்டிலே தோன்றி மறைந்தது.

★

மாடிப்படியில் ஏறும்போது அவன் ஒவ்வொரு படிக்கட்டிலும் சிறிது நின்று நின்று ஏறினான். இதயம் அவ்வளவு விரைவாக அடித்துக்கொண்டிருந்தது. ஏதோ மிக விரைவாக ஓடுகின்ற குதிரையின் காலடி ஓசையைப் போல அவன் மார்பு படபடத்துக் கொண்டு இருந்தது. அவன் மாடிப்படியின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டே மெல்ல ஏறினான்.

மூன்றாவது மாடியின் அறைக் கதவைத் தட்டினான். வேலைக்காரி வந்து கதவைத் திறந்தாள். "ஐயா இருக்கிறாரா!" என்றான்.

"இருக்கிறார், வாருங்கள்" என்று அவனை அழைத்துக் கொண்டு போய் உட்காரவைத்து விட்டுச் சென்றாள் வேலைக்காரி.

நடுத்தர வர்க்கத்தார் வாழுமிடம் என்பதை அந்த அறை தெளிவுபடுத்தியது.

ஏதோ கெடுதலாக முடியப் போகும் கட்டத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவனைப் போல அவன் அந்த அறையிலே காத்திருந்தான்.

அந்த வீட்டுக்காரர் வந்தார். அங்கிருந்த நாற்காலியைச் சுட்-

எவரெடி கன்பெக்‌ஷனரி ஒர்க்ஸ்
நிறுவனம் 1942ல்
உயர்ந்த ரக மிட்டாய் தினுசுகள்
சாஸ்திரிக முறைப்படி தயாரிப்பவர்கள்.
எங்களிடம் பாயில்டு கூட்ஸ் பான்கூட்ஸ், காரமல்ஸ்
லோஜென்சஸ் இன்னும் பலவகை மிட்டாய்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.
REGD Eveready SWEETS
விவரங்களுக்கு:
72, எல்லம்மன் கோயில் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-17

டிக் காட்டி "உட்காருங்கள் ஐயா" என்ருர். அவன் உட்கார்ந் தான். மூச்சுத் தடுமாறிக் கொண்டே "ஐயா......ஐயா... என்னைப்பற்றி......"

"பயனற்றது....ஐயா.....உம் மைப் பற்றி என் மனைவி கூறக் கேட்டேன்" என்ருர். கண்டிப் பும் ஒழுங்கும் நிறைந்த மனிதர் என்பதை அவர் குரல் விளக் கிற்று.

"வெட்கமும் வேதனையும் பிடுங்கித் தின்ன வாழ்கிறேன். ஒரே தடவை...பிள்ளையை வாரி அணைக்க......"

அவர் எழுந்திருந்து வேலைக் காரியைக் கூப்பிட்டுப் "பையனைக் கூட்டிவா" என்ருர்.

வேலைக்காரி அறையை விட்டுப் போனுள். அவர்கள் இருவரும் ஒருவர் முன் ஒருவர் ஊமையைப் போலப் பேசாது காத்திருந்தனர்.

பத்து வயதுப் பையன் அறையினுள் ஓடி வந்தான். தன் தகப்பன் என்று நினைத்துக் கொண்டிருக்கிற அந்த வீட்டுக் காரர் அருகில் ஓடிவந்தான். பழக்கமில்லாத வேருெருவர் அங்கிருப்பதைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டான் பையன்.

வீட்டுக்காரர் அவனைக் கட்டித் தழுவி "என் கண்ணே! அதோ அந்த ஐயாவிற்கு முத்தம் கொடு, போ" என்ருர்.

பையன் பழக்கமில்லாத அந்தப் புதியவரிடம் மெல்லச் சிரித்துக்கொண்டே தயங்கித் தயங்கிப் போனுன்.

பையனை விழுங்கி விடுபவனை போலப் பார்த்துக்கொண்டே தட்டுத் தடுமாறி அவன் எழுந் தான். அவன் தலையிலே இருந்த தொப்பி கீழே விழுந்தது.

வீட்டுக்காரர் பெருந்தன்மை யோடு வேறெதையோ பார்ப் பவர் போலச் சன்னலண்டை சென்று தெருவைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

பையன் ஒன்றும் புரியாத நிலையில் அவன் அருகிலே சிறிது நேரம் நின்ருன். கீழே விழுந்த தொப்பியை எடுத்துக் கொடுத் தான்.

அவன் பையனை இறுகத் தழுவி வெறியனைப் போலக் கன்னம், முகம், மூக்கு, வாய், கண், நெற்றி எல்லாம் முத்தம் கொடுத்துக் கொண்டே இருந் தான்.

அவன் தருகின்ற முத்தங் களைப் பாாத்து வெருண்ட பையன் தலையை வேறு பக்க மாகத் திருப்பிக்கொண்டு தன் சிறிய கைகளால் அந்த மனித னின் பசித்த உதடுகளைத் தடுத் துத் தடுத்து விலக்கிக் கொண் டிருந்தான்.

வீட்டுக்காரர் திரும்பிப் பார்த் தார். "ஊம் சரி—போதும்" என்ருர்.

அவன் திருடனைப்போல மாடிப்படியை விட்டி றங்கி ஓடிக் கொண்டிருந்தான்.

(மூலம்—மாப்பசான்)

நமக்குள்ளே

சுகி

9

எக்களிப்பு சம்பந்தமாகப் பலருக்கும் பல விஷயங்கள் உடன்தையாகவிருக்கலாம். காலத்தாலும் இடத்தாலும் இவை மாறிக்கொண்டும் வரலாம். ஆனால் வரப்போகிற இன்பமோ சென்றுபோன இன்பமோ நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் இன்பத்தைவிட ருசிகரமானது! பொருள் சம்பந்தப்பட்ட மட்டில் கையில் இருப்பதுதான் மேல். இன்பத்துக்கு இதைச் சூத்திரமாகக் கொள்ளமுடியாது. கலியாணமாகாத வயதுடையவர்கள், கலியாணமாகி வயதானவர்கள், இருபாலாரும் சமீபத்தில் கலியாணமாகி இன்பக் கடலில் மிதப்பவர்களைவிட அதிகப்படியான இன்பத்தைக் கற்பனை மூலம் அடைகிறார்கள்! வாழ்க்கையில் நேரில் காணும் கோர விபத்து நாடகத்தில் காணும் கோர விபத்தைவிட ரசிக்கக் கூடியதல்லவா? அதுபோன்றது தான் இன்பமும்; நிகழ்காலத்தை விட மற்ற இரு காலங்களும் ருசி தருகிறவை.

தமிழ் சம்பந்தப்பட்ட வரையிலும், இந்த இன்பம் உண்மையா? சங்க காலத்தையே போற்றுவாரும், வரப்போகிற உரைநடை வளர்ச்சியை எதிர்பார்த்து இருப்பாரும், தற்காலத் தமிழ் வளர்ச்சியை அவ்வளவு ஆதரிப்பதில்லை. தமிழை எத்தனையோ வகையாகப் பிரிக்கிறார்கள். பிரிக்கவும் முடியும். முக்கியமாகப் புரியும் தமிழ், புரியாத தமிழ் என்றுதான் நான் பிரிப்பது வழக்கம். புலமை என்பது வார்த்தைகளில் இருக்கிறது என்று எண்ணுகிற திருக்கூட்டம் எனக்குப் பிடிக்காது; பொருள்தான் முக்கியமே தவிர அகராதி பார்த்துப் படிப்பதற்காக நாம் படிக்கவில்லை. எழுதுகிறவர்களின் சிறந்த நோக்கம் வாசகர்களைத் திருப்திப்படுத்துவதுதானே. படிக்கிறவர்களின் நோக்கம் எழுதுகிறவர்களைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதுதானே. இந்த இரு நோக்கத்திற்காகத்தான் புத்தகம் வெளிவருகிறது. அப்படி இல்லாது அடிக்கொருதரம் அகராதியைப் புரட்டிக் கொண்டிருக்கும்படி ஒரு ஆசிரியர் செய்தால் அவர் காசில்லாமல் போட்டிப் பந்தயம் நடத்துகிறார் என்றே ஆகும்! கடினத் தமிழ், தீந்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ் என்று பாகுபாடுகள் பல செய்தாலும் எல்லாம் புரியுந் தமிழ், புரியாத தமிழ் என்ற இரு பகுதிக்குள் அடக்கம். சிரமமான பகுதி இனி வருவதுதான். யாருக்குப்புரியும் யாருக்குப் புரியாது என்பதுதான் சிக்கலான கேள்வி. படித்-

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
177804